


சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

சமய சஞ்சிகை



ஆசிரியர்

கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T|200|0775

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



இலங்கை இந்துமத குருபீடாதிபதி

'சிவாகம ஞானி – சிவாச்சார்ய சிம்மம்'

யாழ் – நாயன்மார்கட்டு

**கலாநிதி அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்**

அவர்களின் ஞாபகார்த்தமாக

சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

**எனும் ஆன்மீக மலர் வெளியிடப்படுகிறது என்பதனை ஆஸ்தீக அன்பர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.**

சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடாதிபதி

"சர்வதேச இந்துமத குருபீடாதிபதி"

**கலாநிதி ஸ்ரீஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்**

(அகில இலங்கை சமாதான நீதவான்)

தலைவர் – இலங்கை பிராம்மண சமாஜம்

**சர்வதேச இந்துமத குருபீடம்**

46, 7வது லேன், (புளூமெண்டால் றோட்) கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.

Telephone & Fax : 0094-722-422239

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவாச்சாரியாரின்.......

# அருள்ஜோதி

(ஆன்மீக சஞ்சிகை)

அருள் - 06 வைகாசி - ஆனி - 2003 ஜோதி - 60

ஆசிரியர் : கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் - ஜே.பி.

## மலர்ந்த புஷ்பங்கள்

1. ஆசியுரை. அருளுரை

2. பெரியபுராணம் - டாக்டர். இரா. மோகன்

3. தமிழிசையின் தொன்மை - பேராசிரியர் சிவபாலன்

4. வரலாற்றில் வரும் நாயன்மார்கள் - ஸ்ரீ சாஸ்தாபீட இளவரசன்

5. சிறுவர் பகுதி - ஸ்ரீ லக்ஷ்மீபிரதா

6. மங்கையர் பகுதி - குருஜீ

7. அருள்ஜோதி - வினா விடை : ஆசிரியர்

**சர்வதேச இந்துமத குருபீடம்**

**INTERNATIONAL HINDU RELIGIOUS GURUPEEDAM**

**அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்**


**ALL SRI LANKA SABARIMALAI SRI SASTHA PEEDAM**

46, 7th Lane, Colombo 13. Sri Lanka.

Tel : 0094-722-422239



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

**ஸ்ரீசந்திர மௌலீஸ்வராய நம**

**ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பராகத**

# ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

அவர்கள்

ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்

1. சாலைதெரு, காஞ்சிபுரம் - 631502

"இலங்கை இந்துமத குருபீடாதிபதி" சிவாகம ஞானி "சிவாச்சார்ய சிம்மம்" "கலாநிதி" அமரர் அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் ஞாபகார்த்தமாக, சர்வதேச இந்துமத குருபீடம் வெளியிட்டுவரும் "அருள்ஜோதி" எனும் ஆன்மீக சஞ்சிகை சமயக்கட்டுரைகள், ஆகம, புராண கட்டுரைகள், வினா - விடை, மாணவர் பகுதி, மங்கையர் பகுதி, செய்திக் கோவை என பல சிறப்பு அம்சங்களுடன் வெளிவருவது அறிந்து சந்தோஷம்

இம்மலரின் ஆசிரியர் "கலாநிதி" ஸ்ரீ ஜயப்பதாஸக் குருக்கள் அவர்களின் சமயப் பணியைப் பாராட்டி, ஆன்மீக அன்பர்களுக்குஅருளின்பம் ஊட்டும் மலராக 'அருள்ஜோதி' மலரை ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ்மிருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதிஷ்டா கலாநிதி - பிரதிஷ்டா சிரோமணி

# பிரம்மஸ்ரீ. சாமி. விஸ்வநாதக் குருக்கள்

-வழங்கிய ஆசிச்செய்தி

இலங்கைத் திருநாட்டில் தலைசிறந்த சிவாச்சாரியராக வேத - சிவாகம, புராண, இதிகாஸ, ஜோதிட, மாந்திரீக, வைத்தியம் என பலதுறைகளிலும் பாண்டித்தியம் பெற்று இலங்கை இந்துமத குருபீடாதிபதியாக, சிவாகம ஞானியாக அந்தண குலத்தவர்க்கு ஏற்படும் சந்தேகங்களை ஆதார பூர்வமாக உடனுக்குடன் தெளிவு பெறவைத்து அமரரான அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் ஞாபகார்த்தமாக.

அன்னாரின் புதல்வர்களில் ஒருவரான "ஸ்ரீ சபரிமலை சாஸ்தா பீடாதிபதி" ஸ்ரீ ஐயப்பாதாஸக் குருக்கள் 'அருள்ஜோதி' எனும் ஆன்மீக மலரை வெளியிட்டு வருவது பாராட்டுக்குரியது.

எமது பிராம்மண சமூகத்திற்கு ஏற்படும் துன்பங்கள், சங்கடங்களுக்கு துணிந்து குரல் கொடுக்கக்கூடிய, குரல் கொடுத்து நடவடிக்கை எடுத்துவரும் எங்கள் அன்பு தாஸனான ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள்

எமது குருமார்களுக்கு பாதுகாப்பு படையினரால் ஏற்பட்ட அசௌகரியங்கள் குறித்து மேன்மைதங்கிய ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களை சந்திப்பதற்கு பத்துக் குருமார்களுடன் சென்றபோது ஜனாதிபதி அவர்கள் அவசர வேலையாக வெளியே சென்றுள்ளார்கள். எனவே என்னை உங்களுடன் பேசுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார் என்று ஜனாதிபதியின் செயலாளர் கூறியபோது நாம் எமது குருமார்களின் பிரச்சனை தொடர்பாக ஜனாதிபதி அவர்களுடன்தான் பேச விரும்புகிறோம் என்று துணிந்து கூறியதன் பயனாக அடுத்தவாரமே ஜனாதிபதி அவர்கள் அலரிமாளிகைக்கு பத்து குருமார்களையும் அழைத்து 45 நிமிடங்கள் உரையாடினார். இது எமது பிராம்மண சமூகத்திற்கே கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

இந்த வெற்றிக்குரியவர் உண்மையில் ஐயப்பதாஸக் குருக்கள்தான் என்றால் எவரும் மறுக்க முடியாது.

எமது இலங்கை பிராம்மண சமாஜத்தின் தலைவராக, சர்வதேச இந்துமத குருபீடாதிபதியாக ஸ்தாபக தலைவராக, இந்துசமய கலாசார முத்தமிழ்ச் சங்கத்தின் தலைவராக, அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடத்தின் பீடாதிபதியாக பல, சமயப்பணி, சமூகப்பணி, கலைப்பணி ஆற்றிவரும் கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார். J.P. அவர்களின் பணி மென்மேலும் சிறக்க ஆசீர்வதிக்கிறேன்.

அவர்கள் வெளியிடும் 'அருள்ஜோதி' எனும் ஆன்மீக மலர் ஆஸ்தீகப் பெருமக்களுக்கு பயனுடையதாக அமைய இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

சுபம்

கவிசுத்தாராம ரோட்,
வெள்ளவத்தை, கொழும்பு.
Tel : 365063

பிரம்மஸ்ரீ. சாமி. விஸ்வநாதக் குருக்கள்
(நவாலியூர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ கற்பக விநாயகர் துணை

ஸர்வஸாதகமணி, ஸர்வ சாதக திலகம்

**சிவஸ்ரீ. தே. சு. முத்துக்குமாரசுவாமி சிவாச்சாரியார்**

(தென்னிந்திய அமைப்பாளர், சர்வதேச இந்துமத குருபீடம்)

## அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

புண்ணியபூமியான லங்காபுரியில்ஜாதி மத இன வேறுபாடின்றி எல்லா இனங்களிலும் ஹ்ருதயத்திலும் ஆண்டவன் இருக்கின்றான் என்கிற பெருநோக்குடன் இலங்கை இந்துமத குருபீடாதிபதி, சிவாகமஞானி, “சிவாச்சார்ய சிம்மம்” ***அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்*** அவர்களின் ஞாபகார்த்தமாக அருள்ஜோதி என்னும் ஆன்மீக இதழ் ஐயங்களைப் போக்கும் விதத்தில் சபரிமலை சாஸ்தாபீடாதிபதி கலாநிதி ***ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார்*** நடாத்திவரும் ஆன்மீகமலர் மூலம் விஷயங்களைப் படித்து நல்லுணர்வை பெறுமாறும் மேலும் இங்கு மட்டுமல்லாமல் சமய குரவர்கள் பாடியது போல் “தாய் நாடு முதல் வெளிநாடுகள் உட்பட” **முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே பின்னைப்புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே** என்கின்ற தேனினும் இனிய திருவாசகத்தின்படி “அருள்ஜோதி’ பத்திரிகை எல்லோராலும் படித்து நன்மையை அடைய வேண்டுமென இறைவனை பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறேன்.

ஸர்வஸாதகமணி

தே. சு. முத்துக்குமாரஸ்வாமி சிவாச்சாரியார்

14, கற்பகவிநாயகர் கோவில் தெரு,

கிழக்கு தாம்பரம்

சென்னை - 59



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவை ஆதீனம் - மஹாராஜஸ்ரீ

**சு. து. ஷண்முகநாதக் குருக்கள்**

**அவர்கள் வழங்கிய**

## பிரார்த்தனையுரை

ஆரோஹணம் அவரோஹணம் எனும் ஏற்ற இறக்கங் கொண்ட இரு பிரிவுகள் உண்டு. இரண்டும் கலக்கும் போது இனிமையான ராகம் பிறக்கிறது. மேடும் பள்ளமும் நிலத்தில் தெரிகிறது. இரண்டையும் சமன் செய்யும் போது அழகான தரை தோன்றுகிறது. இதேபோன்று ஏராளமாகத் தகவல்களுண்டு. நேர் சீரான அரசியலை ஏற்படுத்திய பல்லவ மன்னர்கள் அரச சபையில் சமன் நிலையான கட்டுமானத்தில் பிரஜைகளை ஆட்சி முறைக்குதவுமுகமாக அணைத்து வந்தமையினாற்தான் தமிழகத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்கியது. புலவர்களையும் புரோகிதர்களையும் ஆஸ்தான மண்டப ஆலோசனைகளில் இணைத்தும் அவர்களது தர்மநெறி போதனைகளையும் பல்லவ மன்னர்கள் தமது அரசியல் திறனுக்கு பெற்றதனை சரித்திரம் எடுத்துக்காட்டும். பல்லவ மன்னர்களால் வளம்படுத்திய சைவ நீதி, சிவசங்கல்பம், சிவநெறி, என்பனவற்றை இன்னும் தொடர் நிகழ்ச்சியாக சிரமேற்கொண்டு பவனிவருபவர்கள் அந்தண சிரேஷ்டர்களே என்பது சான்றோரும் கண்ட முடிவு. வறுமையில் வாடினும் அந்தவம்சம், தமது முதாதையர் கடைப்பிடித்துவந்த கலாசாரங்களை தவறவிடாது இயன்றளவு இன்றுவரை பேணிக்காத்து வருவது சைவபரம்பரைக்கு உயிர்நாடியாக அமைகிறதென்பதை பண்டிதமணி கணபதிப்பிள்ளை கூட கூறினார். “வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்” எனும் வாய்ப்பாடு வழக்கிலிருந்தாலும், மனிதன் இந்த இடைநிலைக் காலத்தில் என்ன செய்தான் என்பதை அடுத்த சந்ததியினர் ஆராய்வர். சீலம் மிகுந்த வாழ்விற்கே பூமி பாரதபூமிதான் என்பது புராணங்கள் அறியத்தருகிறது. இங்குதான் வானிலுள்ள தேவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர்களும் தமக்கு யாதானுமொரு குறை நேரப்பெற்றால் வருகை தந்து, தவம், பூசை முதலான செயல்களைப் புரிந்து குறைகள் நீக்கப்பெறுவர். பெருமை தரும் சிவபூமியே இப்பூமி. பெருமையாக வாழவும் முடியும். "பெருமை" எனும்போது" மனிதர்கள் புலன்வழி மனசை விரும்பியவாறு செலுத்தாது, மனதையடக்கி இறையுணர்வோடு சார்ந்த இயல்புகளுக்காளாகுமாறு வசைத்து ஆறுதலேயாம்," இவ்வாறு தான் வசிஷ்ட மகிரிஷி ரிஷ்யசிருங்கருக்கு எடுத்தோதியவர். இதனை மாவிட்டபுரத்தில் எனது சிரேஷ்ட மகன் இரத்தினசபாபதி சிவாசார்யாரது ஆசார்யாபிஷேக வைபவத்தில் ஸ்ரீ ஸ்கந்த ஸாம்பசிவ சிவாசார்யார் வெகு அழகாக எடுத்துரைத்தார். இவ்வாறு பெருமையாக வாழ்பவர் தான் "செயற்கரிய செய்வர் பெரியார்" எனத் திருவள்ளுவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பரமேஸ்வராக்கல்லூரியில் பாடம் படித்த பிராமணர்கள் அனைவரும் பரமேஸ்வரன் ஆலயத்தில் காலையில் வேதமோதுவதுண்டு. அது அவசியமாகியது. ஸ்ரீ சாம்பசிவ சிவசார்யர்கூடத் தவறாது வேதமோதி வெண்ணீறு வழங்கி, திருமுறைகளையும் திருப்புகழ்களையும் பாடி சூழலைப் புனிதப்படுத்தியவர். அதனால் பல்லவ அரசர்கள் செய்தது போன்று பரமேஸ்வராக் கல்லூரி அதிபர்கள் இவருக்கும் விஷேசமான தகைமைகளைத் தந்து அவரது மார்க்கத்தில் சிறந்துயர வேண்டிய ஆதரவுகளையும் ஆற்றுப்படுத்தல்களையும் உதவினர், ஸ்ரீ சிவபாதசுந்தரம், மு. ஞானப்பிரகாசம், குமாரசுவாமிப் புலவர், சீதாராமசாஸ்திரிகள், இவ்வாறு தலைசிறந்த கல்விமான்களது நயன தீட்சைபெற்றதால் அவர் **இந்துமத குருபீடாதிபதியாக ஆரோகணித்தார்.** எந்நேரமும் சிவசிந்தனை தவறாது சிவபூசைகள், காண்போருக்குக்கெல்லாம் நற்சிந்தனைகள் இரப்போருக்கெல்லாம் ஏதாவதொன்றை நல்கும் குணசீலர். ஆலய நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு கைமாறு கருதாது நல்கும் செயற்திறன்கள், மகோற்சவ கால சொற்பொழிவுகளில் பிரார்த்தம், சஞ்சிதம், ஆகாமியம் பற்றிய விரிவுரைகளால் மக்கள் இனி யாது செய்ய வேண்டுமென்ற உணர்தல்கள், இவ்வாறெல்லாம் வாழ்நாள் முழுவதும் செயற்பட்டு, பல்லவ அரசர்கள் வளர்த்த முத்தமிழையும் வளர்க்க வேண்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பேரவாவினையோடு தனது கடமைகளை தம் புதல்வர்களிடம் ஒப்படைத்துவிட்டார்.

அன்பு நிறைந்த நெஞ்சினில் துளிர்ந்த உணர்வுகளாலும், அறிவு நிரம்பிய சிந்தனைகளில் மலர்ந்த எண்ணங்களாலும், **கொழும்பு மாநகரிலே சர்வதேச இந்துமத குருபீடம் அமைத்து,** சைவ சமூக வாழ்வியலின் மேன்மைக்காகத் தன்னையே அர்ப்பணித்துள்ள கலாநிதி ஐயப்பதாஸ சிவாச்சார்யார் தந்தை வழிநின்று ஆற்றும் கருமங்கள் போற்றுதற்குரியன. **நாடே ஐயப்பதாசனது அருட்செயல்கட்கு சிரந்தாழ்த்தி வணங்குகிறது.** சைவமும், தமிழும் ஓங்க வேண்டுமென்பதற்காக அல்லும் பகலும் நினைவிற் கொள்ளும் ஆதரவுகளுக்கு அறிஞர்கள் பின்னின்று ஆற்றுப்படுத்துகிறார்கள். துணிவும், திறனும், அறிவும் ஆற்றலுங் கொண்டு அயராது சைவநீதி உலகெலாம்பரவப் பாடுபடும் இவ்வுத்தம அந்தண சிரேஷ்டருக்கு ஒவ்வொரு சைவ மகனும் உறுதுணைதந்து அவரை ஆற்றுப்படுத்த வேண்டிய நேரமிது. பறங்கிக் கலாச்சாரம் பல ரூபங்களில் புகுந்து சிவசமய வாழ்விற்குள் புகுந்து சிதைக்க முனைந்திருக்கும் இவ்வேளையில் சர்வதேச இந்துமத குருபீடம்தான் அதற்குத் தகுந்த பதிலடி கொடுத்து அவரவர் எல்லைக்குள் அவர்கள் நடமாடவேண்டுமென்ற சிந்தனைக்கு உயிரூட்டமுடியும். சாம்பசிவ ஐயப்பதாசனுக்கு சகலவல்லமைகளையும் தந்து அவரது தொண்டுகளை சீராகமலர்ந்து, பல்லவர்கால பலாபலன்களை சைவமக்கள் பெறும் வாய்ப்பை உருவாக்க, மாவைக் கந்தன் நல்லருள்புரிய வேண்டுமெனத் தினமும் யான் பிரார்த்திக்கின்றேன்.

**சத்யம் வத ~ தர்மம் சர**

**மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்**
மாவை ஆதீனகர்த்தா
மாவிட்டபுரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# "விண்ணிருந்து வேதவொலி விளக்குகின்றார் எம் ஆசான்"

நல்லூர் - கைலாசபிள்ளையார் கோவிலடி

'நியாய சிரோமணி' "வேத வித்யா சாகரம்"

## அமரர். கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களுக்கு

சர்வதேச இந்துமத குருபீடத்தின் கவிதாஞ்சலி

தமிழன்னை மனங்குளிர்ந்து தந்ததனிப் பெருஞ்சொத்து
அமிழ்தென்னும், தமிழ்மொழியும் அரியதான வடமொழியும்
அறிந்திருந்த நல்லறிஞர் நாம் போற்றும் நல்லாசான்
பிரிந்திறைவன் பதஞ்சேர்ந்தார் பெரும் பேறுதனைப்பெற்றார்.

ஒப்பரிய தமிழ்நாட்டின் உயர்குடியில் பிறந்த ஐயன்
சுப்ரமண்ய சாஸ்த்திரிகள் தப்பில்லாக் கல்வி கற்றார்
செப்பரிய விருது கொண்டார் சீர்மைமிகு வாக்கில் வல்லோர்,
இப்புவியின் வாழ்வை நீத்து இறைவனடி இணைந்து கொண்டார்.

நால் வேதம் நன்கறிந்து ஆகமங்கள் அவைபுரிந்து
நூல் காட்டும் சோதிடத்தை நுணுக்கமாக ஆய்ந்தறிந்து
வேல் போலும் கூர்மைமிகு விளக்கங்கள் கூறித்தம்
கால்பட்ட இடமெல்லாம் கல்விப் பயிர்தனை விதைத்தார்.

"நியாயத்தின் சிரோமணி" நிலைத்ததான விருது பெற்றார்
உபாயங்கள் பல அறிந்து உரியவகை வாதம் செய்வார்
அபாயத்தின் வழி அறிவு செல்லும்போது அவர் ஈயும்
சகாயத்தை நாடிப் பெற்று சாதித்தோர் பலராய் உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த மண்ணாம் தமிழகத்திலிருந்து வந்து இலங்கைத் தீவின்
சிறந்ததான வடபுலத்தில் சிறப்புடனே குடிபுகுந்து
அருந்தவத்தால் தான் அறிந்த அழிவழியாக் கல்வி ஈந்து
பரந்துபட்ட உலகை நாமும் புரிந்துவாழ வழிசமைத்தார்.

வேதத்தை ஆகமத்தை விந்தைமிகு ஜோதிடத்தை
ஓதிட ஓதுவிக்க உரியதான ஓரிடமாய்
தீ தகற்றும் **"கணபதீஸ்வர குருகுலத்தை"க்** கண்டெடுத்தார்.
வேத ஞானம் அவராற் பெற்றோர் வெளிநாட்டில் பலர் உள்ளார்.

அண்ணாமலை பல்கலைக்கல்லூரி அவர்களித்த
விண்ணோர் போற்றும் சம்ஸ்கிருத விரிவுரையாளர் பதிவிதனை
எண்ணுகையில் இவர் குருவாய் எமக்கமைய நாமும்
பண்ணிய மாதவத்தை என்னவென்று எடுத்துரைப்போம்.

வானவர்கள் வாழ்த்திசைத்து வாரீர் என அழைத்து
"ஞானவானை" வானுலகிற் கழைத்துச் சென்றார் நாம் அறிவோம்
விண்ணிருந்து வேதவொலி விளக்குகிறார் எம் ஆசான்
மண்ணிருந்து மனம்திறந்து மதியுடனே ஏற்றிடுவோம்.

**எம் குருநாதர் திருப்பாத கமலங்களுக்கு**
**கவிதாஞ்சலியை காணிக்கையாக்குகிறோம்.**

"ஸ்ரீ கணபதிஸ்வர குருகுல மாணவன் - சரவணபவன்"

**ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் J. P.**

(தலைவர் - இலங்கை பிராம்மண சமாஜம்)

குருபீடாதிபதி

***சர்வதேச இந்துமத குருபீடம்***


**46, 7th Lane, Colombo-13.**

கவிதை ஆக்கம்
(கலாநிதி. ஜெ. திவ்யா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பெரியபுராணம்

## ஒரு வழிகாட்டி நூல்


டாக்டர் இரா. மோகன்

பேராசிரியர்–ஒப்பிலக்கியத் துறைத் தலைவர்,
தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்


பண்டைக்காலந்தொட்டே தமிழகம்–தமிழினம் சமய நெறியைக் கண்டும் அந்நெறியில் நின்று ஒழுகிப் பண்பட்டும் வந்துள்ளது. 'வாழ்க்கைக்கு நெறியும் முறையும் உண்டு. வாழ்க்கை இலட்சிய நோக்குடையது. குறிக்கோளில்லாத வாழ்க்கை கூடைச்சாம்பலுக்கே.குறிக்கோளுடன் கூடிய வாழ்க்கையே குவலயம் போற்றும் வாழ்க்கை என்று வாழ்க்கைக்கொரு சிறப்பான குறிக்கோளைச் சமயநெறி வழியாகத் தந்து மனித வாழ்க்கையை வளப்படுத்திய மொழியும் தமிழே.' என்கிறார் தவத்திரு குன்றக்குடி அடிகளார் (பெரியபுராணச் சொற்பொழிவுகள், ப.10) பரிபாடல் திருமுருகாற்றுப்படை, தேவாரம், திருவாசகம், திவ்வியப்பிரபந்தம், திருப்புகழ், திருவருட்பா என்று கடவுள் வழிபாட்டைக் கல்லும் கரையும் வண்ணம் எடுத்துக்கூறும் பனுவல்கள் பற்பல காலந்தோறும் தோன்றித் தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும் பக்குவப்படுத்தி வந்துள்ளன. ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின் மொழி என்றும், ஜெர்மன் தத்துவத்தின் மொழி என்றும், பிரேஞ்சு தூதின் மொழி என்றும், இத்தாலியம் காதலின் மொழி என்றும் கூறுவது ஒருபுடை ஒக்கும் எனின், தமிழ் இரக்கத்தின் மொழி எனக் கூறுவது இனிது பொருந்தும். பக்தியின் மொழி, எனவுமாம் (தமிழ்த்தூது, ப.34) இத்தகைய விழுமிய பக்தி நெறியில் தலைநின்று, வாழ்க்கையின் குறிக்கோளைச் செம்மையாக நிறைவேற்றியவர்கள் இறையடியவர்கள். இவ்வடியவர்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறியைச் சுட்டி இஃது ஒரு வழிகாட்டி நூலாக விளங்குவதை எடுத்துக்காட்டும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

பெரியபுராணத்தில் பக்தியும் உண்டு. சமயமும் உண்டு. என்றாலும் இவை அனைத்தையும் தாண்டி மனிதன் மனிதனாக வாழ வேண்டுமேயானால் குறிக்கோள், இறை உணர்வு, தொண்டு என்ற மூன்றும் வாழ்வில் தலை தூக்கினாலன்றி ஓரினம் சிறந்த வாழ்வைப் பெறமுடியாது என்பதே பெரிய புராணத்தின் உயிர்நாடியாக விளங்குகிறது.

### அன்புநெறி

அன்பும் சிவமும் இரண்டென்ப அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்திலார்
அன்பே சிவமாவது ஆறும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

எனப் பாடினார் திருமூலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து
நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும்
விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா
அன்புனக்கு என்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம்
உடையானே

என்றார் மாணிக்கவாசகர்.

## இறைவன் முன்னர் எல்லோரும் சமம்

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே என்று பாடினார் வள்ளலார். இறையடியவர்கள் ~ எந்நிலையில் உள்ளவராயினும், எக்குலத்தில் பிறந்தவராயினும் எல்லோரையும் இணைத்து நின்றது அன்புநெறி ஒன்றே ஆகும். இறைவன் மீது கொண்ட அன்பு ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு அமைந்தது பெரியபுராணம். வேடராயினும், புலையராயினும். பாணராயினும், குயவராயினும், எல்லோரும் இறைவன் முன்பு சமம் என்பதை எடுத்துக் காட்டுவது பெரியபுராணம். உள்ளத்தில் உள்ள அன்பேயன்றிப் புறத்தோற்றங்கள் எதுவும் இறையன்புக்குத் தடை ஆகா எனக் காட்டியது பெரியபுராணம்.

வெட்டு, குத்து, கொல்லு என நாளும் வாழும் வேடவர் குலத்தில் பிறந்த கண்ணப்பநாயனார், மலையில் குடுமித்தேவர் என்று அழைக்கப்பட்ட சிவபெருமானைக் கண்டவுடன் காதலாகி (வங்கினைப் பற்றிப் போதாவல்லுடும்பென) அவர்மீது பற்றுக்கொண்டு, பிற எல்லாவற்றையும் மறந்து வாழ முற்படுகின்றார். இறைவனுக்காகவே மா, பன்றி, கடா முதலான விலங்குகளை வேட்டையாடுகிறார், இறைச்சியை சுட்டுப் பதம் பார்த்து இலையில் எடுத்துக் கொள்கிறார். இறைவனுக்கான மலரைத் தலையில் தாங்கி, அவரை நீராட்ட நீரை வாயிலும் நிரப்பிக் கொண்டு வந்த அன்பு அன்பு உமிழ்வார் போல் அந்நீரை உமிழ்கிறார். அவர் வலது கண்ணிலிருந்து குருதி வழிவதைக் கண்டு, தம் வலது கண்ணையே இடந்து அப்புகிறார், இடது கண்ணிலும குருதி வழிவதைப் பார்த்தவுடன், தம் இடது கண்ணையும் தோண்ட முற்படுகிறார். தமக்கு எவ்வளவு துன்பம் நேர்ந்தாலும் தாங்கிக் கொள்ளும் தாய், தன் குழந்தைக்கு ஒரு துன்பம் நேர்ந்தாலும் துடிக்கின்றதுடிப்பைப் போன்றே கண்ணப்பரின் செயலும் விளங்குகிறது. தாயினும் சாலப்பரிந்து, அவர் செய்யும் செயலை,

அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல்
அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும்
அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய
வாமென்றும்
அவனுடைய நிலையில் வாறறிநீ என்றருள்
செய்வார்.

என்று இறைவனே சிவகோசரியாருக்குக் கூறுவதாகக் குறிப்பிடுகிறார் சேக்கிழார். அதனால்தான் மாணிக்கவாசகர், திருக்கோத்தும்பியில், கண்ணப்பரது அன்பையே அன்பின் மேல் எல்லையாக வரையறுத்துக் கூறுகின்றார்.

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை
கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்
ஆட்கொண்டருளி
வண்ணப்ப பணித்தென்னை வாவென்ற
வான்கருணைச்
சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய்
கோத்தம்பீ

என்று கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு தமக்கு இல்லையே என்று குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

## நால்வர் காட்டி வழி

'நாலு பேர் நடந்த வழியில் நட' என்பது இன்றும் பேச்சு வழக்கில் வழங்கும் சொல்நடை. நாலு பேர் என்பது சைவ சமயத்தின் தூண்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிய திருஞானசம்பந்தர். திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரைக் குறிக்கும். காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி', இறைவனை வழிபட்டவர்கள் அவர்கள். இறைவனை அடைய அவர்கள் காட்டிய வாழ்க்கை நெறிகள் நான்கு. அவையாவன,

| | |
|---|---|
| நன்மகன்மை நெறி | (சற்புத்ர மார்க்கம்) |
| தொண்டு நெறி | (தாச மார்க்கம்) |
| தோழமை நெறி | (சக மார்க்கம்) |
| யோக நெறி | (ஞான மார்க்கம்) |

ஆகியன ஆகும்.

## குறிக்கோளும், இறையடியார்களும்

சமணம், பௌத்தம், காளாமுகம் எனப் பல்வேறு மதங்கள் தோன்றி, மக்களைக் குழப்பிக் கொண்டிருந்த சூழ்நிலையில், 7ம் நூற்றாண்டில் தோன்றிய திருஞானசம்பந்தரும், ஊர் ஊராகச் சென்று, கோயில்கள் தோறும், இறைவனை வழிபட்டு வணங்கி, பாடல்கள் பாடி மக்களை ஒன்றிணைத்தனர். செல்வாக்கிழந்த சைவ சமயத்தை மீண்டும் நிலைநிறுத்திய கலங்கரை விளக்கங்களாகத் திகழ்ந்துள்ளனர். அவர்களைப் பின்பற்றிய அடியவர்கள், இறைவனுக்குத் தொண்டு செய்தல், இறையடியவர்களுக்குத் தொண்டு செய்தல் என்று ஏதேனும் ஒரு குறிக்கோளைத் தம் வாழ்வியல் நெறியாகக் கொண்டு ஒழுகினர். வாழ்க்கையின் குறிக்கோளைச் செம்மையாக நிறையேற்றிய இறையடியார்களின் வரலாற்றை இனிதே எடுத்துரைப்பது தான் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம், பெரிய புராணத்தை, 'பக்திச்சுவை கனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவர்' சேக்கிழார் ஆவார்.

இடைக்காலத்து இலக்கியங்களில், நாட்டு மக்களின் வாழ்க்கை பற்றி அறிவிக்கும் வழிகாட்டி நூலாக விளங்குகிறது பெரியபுராணம். சேக்கிழார் காட்டும் இறையடியார்கள், தம் மேனி மேல் பூசும் நீறு போல் உள்ளும் புனிதர்கள், அவர்கள் ஐம்பூதங்கள் தம் நிலையில் கலங்கினாலும் மாதொரு பாகம் மலர்த்தாள் மறவாதவர்கள், கோதிலாத குணப் பெருங்குன்றனையவர், ஈர அன்பினர், ஈசன் பணி அல்லது ஒன்று இலர், பக்தி வழிபாடு தவிர, முத்தியையும் மதித்து நாடாத பெருமிதமான மனப்பான்மை உடையவர்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால்,

*கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்*
*ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்*
*கடும் அன்பினில் கும்பிடலே யன்றி*
*வீடும் வேண்டா விறலின் விளங்கினார்*

*என்று அவர்களைப் போற்றிப் பாடுகின்றார் சேக்கிழார், இத்தகைய அடியவர்களைப் பாடும் பெரியபுராணம், இவ் அடியார்களின் வழி, சமுதாயத்திற்கு மனிதனுக்கு - வாழும் நெறி முறைகளைக் காட்டிச் செல்கின்றது. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு - வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு - உரிய வழி முறைகளைக் கூறிச் செல்கின்றது.*

## பெரிய புராணத்தின் உயிர்நாடி

*பெரியபுராணம் காட்டும் அடியவர்கள் ஒரே காலத்தில் வாழ்ந்தவர் அல்லர், ஒரே ஊரில் வாழ்ந்தவர் அல்லர், ஒரே பிரிவினைச் சேர்ந்தவரும் அல்லர், அப்பட்டியலில் ஆண்டியும் உண்டு, அரசனும் உண்டு, பெரும் வணிகர்களும் உண்டு, மண் ஓடு செய்து கொடுத்து வாழும் எளிய வணிகரும் உண்டு, பல்வேறு தொழில் செய்கிறவர்களும் உண்டு, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், சூத்திரர் எனப் பல்வேறு சாதியினரும் உண்டு, இவர்கள் அனைவரும் சிவனடியார்கள். சிவன் மீது பற்றுக் கொண்டவர்கள் என்னும் ஒற்றுமையைத் தாண்டி, மற்றொன்றும் இவர்களைப் பிணித்து வைத்துள்ளது. அதுதான் குறிக்கோள், ஒவ்வொரு சிவனடியாரும் ஒரு குறிக்கோள் உடையவராக விளங்குகிறார். ஒவ்வோர் அடியவர்க்கும் தாம் தாம் ஏற்றுக்கொண்ட தொண்டை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்ற முனைப்பு கொண்டவராக விளங்குகின்றனர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக இசையில்

# தமிழ் இசையின் தொன்மை



பண்ணிசைக் கலாநிதி, சங்கீத வித்வான்
**பேராசிரியர் எஸ். கே. சிவபாலன்**

இசைத்துறை அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
சிதம்பரம், தமிழ்நாடு
முன்னாள் விரிவுரையாளர், தமிழ்நாடு அரசு
இசைக்கல்லூரி, சென்னை.



தமிழிசை பண்டைக் காலத்திலிருந்தே திராவிட நாகரீகத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியுற்ற, பண்பாட்டின் பின்னணியில் தோன்றி வளர்ந்த இசை மரபாகும். திராவிடர் நாகரிகமென ஆராய்ச்சி அறிஞர்களால் கருதப்படும் சிந்துவெளியில் காணப்பெற்ற இசைப்படிமங்கள், தமிழர் இசையின் தொன்மையை நன்கு வலியுறுத்தும் அகச் சான்றுகளாகும். உலக இசை வரலாற்றில் தமிழிசையே முதலில் தோன்றிய இசை என, அண்மைக்கால உலக இசை ஆராய்ச்சியின் மூலம் தெரிய வருகின்றது. பொதுவாக உலக இசை வரலாறு, கிரேக்க நாட்டிசையின் தொடக்கத்திலிருந்தே ஆராயப்படுகின்றது. இதற்குக் காரணம் தமிழிசை பற்றிய ஆய்வுகளும், செய்திகளும் வெளிநாடுகளில் பரவாமையேயாகும். பழம் பெருமை உடைய கிரேக்கநாடு, தமிழ்நாட்டுடன் மிகப் பழங்காலம் முதல் பல்வகைத் தொடர்பு கொண்டிருந்தது என்பதனை யாவரும் நன்கு அறிவர். தமிழிசையின் பண்பும், பழைமையும் கிரேக்க நாட்டிசையில் காணப்படுவதை நாம் பெருமையுடன் அறியலாம்.

தமிழர்கள் தங்கள் இசைக்குப் பண் எனப் பெயர் வைத்தமையும் சிறப்புக்குரியதாகும். அதாவது பண்பட்ட சமூக அமைப்பில் இருந்து வெளிவந்த இசைமரபு என்றும் பொருள்படும். சிறப்பாக இன்று எமக்குத் தமிழிசை பற்றிய ஏராளமான செய்திகள் கிடைக்கப்பெறும் நூல்களாவன - தொல்காப்பியம், சிலப்பதிகாரம், பஞ்சமரபு, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பிங்கலநிகண்டு, கல்லாடம், பெருங்கதை, சீவகசிந்தாமணி, பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்விய பிரபந்தம், கருணாமிர்த சாகரம், யாழ் நூல் போன்றவைகளாம். தமிழர்களின் தவக்குறைவால் சங்க காலத்தில் இருந்த சிறுநாரை, பெருநாரை, கூத்த நூல், மதிவாணார் நாடகத் தமிழ் களரியாவிரை போன்ற ஏராளமான முத்தமிழ் நூல்கள் மறைவெய்தி விட்டன.

கி.மு. 7ம் நூற்றாண்டில் எழுந்த தொல்காப்பியத்தில் ஒலியானது உள்ளத்தெழும் எண்ணத்தைக் கொண்டு எழுந்ததாகக் கருதப்படும் பொழுது, அது இசையாகப் பெயர் பெறுவதைத் தொல்காப்பியம் வாயிலாக அறியக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும் உளவெனமொழிய
இசையொடு சிவணிய நரம்பின்மறைய என்மனார் புலவர் - எழுத்ததிகாரம் 33

எனும் வரிகளால் பாடலில் ஒலி நீள்வது இசை நீட்டமாகக் கருதப்படுவதையும், அளபெடை எழுத்துக்களுக்கும் இசைக்கும் இடையேயுள்ள தொடர்பினையும் அறியலாம். மேலும் சங்க கால இலக்கியங்களிலிருந்து, பண்டைத் தமிழர்கள் ஒலியை ஏழாகப் பகுத்து முறைப்படுத்தி, அவற்றை ஏழிசையென அழைத்து அவற்றில் பண்களை (இராகங்களை) உருவாக்கினர் என அறியலாம்.

தமிழர்கள் தங்கள் ஐவகை நிலத்திற்கேற்பப் பண்களை, முல்லைப்பண், மருதப்பண், பாலைப்பண், குறிஞ்சிப்பண் மற்றும் நெய்தல்பண் எனச் சுமார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெயரிட்டு அழைக்கலாயினர், தமிழர் இசைமுறைப் பகுப்பைப் போல், பழைய கிரேக்கர்களும் எகிப்தியரும் அவர்களின் நிலப்பகுதியில் 'தோரியன்மோட்' எனும் இசைமுறையைக் கையாண்டனர். கிரேக்கர்களின், மோட்களை இசைக்கும் மெலடிக் சிஸ்டம் (Melodic System) ஒரு சுர இசையமைப்பைக் கொண்டதாகும். இவ்வமைப்பே தமிழ் இசையிலும் கையாளப்பட்ட முறையாகும். மேலும் தமிழ் இசையில் காணப்படும் பண்ணும் பெயர்த்தல் முறை (கிரஹபேதம்) கிரேக்க இசையில் காணப்படுவதையும் நாம் அறியலாம். பிற நாட்டிசைகளில் குறிப்பாகக் ப்டை கிரேக்க நாட்டிசையில்தான் பண்ணுப்பெயர்த்தல் முறையில் கிரஹபேதம் (Church Models) எனப் பெறும் திருக்கோயில் பண்களை கி.பி 5ம் நூற்றாண்டில் கண்டறிந்தனர்.

தமிழிசையில் ஏழிசை கொண்ட இசையமைப்பு அதாவது குரல் (ஸ), துத்தம் (ரி), கைக்கிளை (க), உழை (ம), இளி (ப), விளரி (த), தாரம் (நி) வரையுள்ள ஒலிகளில் இசை அமைப்பைப் பற்றி தமிழ் இசை நூல்களில்தான் முதன் முதல் காணப்படுகின்றன. மேனாட்டு இசையிலுள்ள DO, RE, MI, FA, SOL, LA, TI எனும் SALFEGIO அல்லது சுர எழுத்துக்கள் (GAIDONE AREZZO) என்பவரால் 10ம் நூற்றாண்டில்தான் அறிமுகப்படுத்தியதாக மேனாட்டு இசை வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இவ்வேழு இசை ஒலிகளுக்கும் சமமாக ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனும் உயிரெழுத்துக்கள் தமிழர் இசையில் வழங்கி வந்திருக்கின்றன. இவ்வெழுத்தும் ஏழிசைக்குரியன எனச் சேந்தன் திவாகரமும், பிங்கலநிகண்டும் கூறுகின்றன. எனவே ஏழிசைச் சுரங்கள் உயிரெழுத்துக்களாகவே பாடப்பட்டு வந்திருக்கின்றது என்பது தெளிவு, மேலும் ஏழிசைகளின் பெயர் மட்டுமின்றி அவற்றின் எழுத்துக்களையும், சங்க காலத்திலேயே அறிந்திருந்தனர் என்பதை, பஞ்சமரபின் வங்கிய மரபில் செய்யுள் 28ல் காணலாம். இதுவே பன்னாட்டு இசைக்கும் அடிப்படையான ஒலிகளாகும். மேலும் உலகநாடுகளின் இசை வரலாற்றில் பன்னிரண்டு சுரத்தானங்களை, முதன் முதலில் விளக்கிய பெருமையும் தமிழிசையையே சாரும். இன்று உலக இசையில் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் செந்துருத்திப் பண்ணும், மத்தியமாவதி இராகம் பழந்தக ராகமும், சுத்த சாவேரி இராகம் மேற்காசிய நாடுகளில் செந்துருத்திப் பண்ணும், காந்தாரப் பண்ணும் நவரோஜ் இராகமும் காணப்படுகின்றன. Afro American Music எனப்படும் ஜாஸ் இசையில் சுத்த தன்யாசி இராகம் அதிகமாகக் கையாளப்படுகின்றது. இந்தோனேசிய பொம்மலாட்ட நாடகத்தில் செந்தருத்திப்பண்ணில் அமைந்துள்ள பாடலைக் காணலாம். மேனாட்டிசையில் Major Scale எனும் அடிப்படை Scale தமிழிசையில் காணப்படும் பழம் பஞ்சுரப் பண்ணாகும். சங்கராபரணம் மேலும் Minor Scale எனும் அடிப்படையும் எமது வரிசையில் 21வது பண்ணாகிய கௌசிகப் பண்ணின் (பைரவி இராகம்) தாய் இராகம் ஆகிய நட பைரவி இராகமாகும்.

பண்டைய தமிழிசை நூல்களில் இசைக் கருவிகளைப் பற்றியும் விரிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. உலக இசை இயலில் நரம்பு (String) காற்று (Wind) மற்றும் தாளக் கருவிகள் (Percussion) எனும் முறையில், இசைக் கருவிகள் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. இவ்வித பகுப்புமுறை முதன்முதலில் தமிழிசை நூல்களில்தான் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. நம் பண்டைய தமிழிசையில் யாழுக்குச் சிறப்பான இடம் அளிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சிலப்பதிகாரத்தில் யாழ் மிகச் சிறந்த இசைக் கருவியாகப் போற்றப்படுகின்றது. தமிழர் தம் ஐவகை நிலங்களுக்கும், ஐவகை யாழ்களை வகுத்துப் பண்படைத்து காட்டியமை மிகப் போற்றுதலக்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போல் கிரேக்க இசையில் Medieval Harp எனும் பெயரில் செங்கோட்டி யாழ் இசைப்பதை நாம் அறியலாம். குழலும், யாழும் பண்டைய கிரேக்க நாட்டில் சிறந்து விளங்கிய இசைக் கருவிகளாகும். ஹோமருக்கு முற்பட்ட காலத்திலிருந்தே குழலும், யாழும் அந்நாட்டில் சிறந்து விளங்கின. பழங்காலத்தில் கிரேக்க மன்னரின் அவைகளில் யாழை ஏந்திய பாணர்களின் பாடல்கள் இடம் பெற்ற நிலையை அந்நாட்டுக் காப்பியங்கள் காட்டுகின்றன. பாணர் மட்டுமின்றி மன்னரும் யாழ் வாசிப்பில் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதையும், அந்நாட்டு காப்பியங்கள் வாயிலாக அறியலாம். அகிலஸ் எனும் கிரேக்க மன்னன் யாழை மீட்டி வீரர்களின் சிறப்புகளைப் பாடுவதாக கிரேக்கக் கவிஞர் ஹோமர் குறிப்பிடுகிறார். கிரேக்கக் காப்பியமாகிய இலியட் வருணிக்கும் அகிலஸ் கேடய ஓவியங்களில், குழலும், யாழும் பயன்படும் திருமண விழாக் காட்சி விளங்குகிறது. இவ்வாறே சங்ககால இசைக் கருவிகளில் யாழ், குழல், முழவு இம் மூன்றும் சிறப்பிடம் பெற்றன என்பதைச் சங்க இலக்கியம் வழியே அறிய முடிகிறது. மன்னர் அவைகளில் யாழுக்கு இருந்த சிறப்பு காரணமாக சங்க இலக்கியப் புலவர், குழலிலும் யாழையே சிறப்பித்துப் பாடினார் எனலாம். அதனால் யாழ் வருணனை ஆற்றுப்படைத்துறையின் ஓரியல்பாக அமைந்து விளங்குவதைக் காண முடிகிறது.

சங்க காலத்தே யாழ், வில் யாழ், ஆதி யாழ், பேரி யாழ், சகோட யாழ், சீறி யாழ், செங்கோட்டி யாழ் எனும் வகைகளைக் கொண்டிருந்தன. யாழ் சங்க இலக்கியத்திற்கு முன்னரும் நெடுங்காலமாக விளங்கியது என்பதைப் பண்டைய யாழ் (அ.நா.186) என்ற சங்க இலக்கியத் தொடர் காட்டும். இவ்வாறு சங்க இலக்கியங்களின் பலவிடத்தும் யாழின் சிறப்புகள் பேசப்படுவதைக் காணலாம். இதனாலன்றோ வள்ளுவரும் குழல் இனிது, யாழ் இனிது என்று கூறினார் போலும். வில் யாழ் சிந்துவெளி, மொஹஞ்சாதாரோ, ஹரப்பா முத்திரையில் உள்ளது. இதனை யாழ் உருவம் என்றே ஆய்வாளர்கள் ஹிராஸ், ரோசனி, ஹண்டர் போன்ற அறிஞர் பலரும் கருதுகின்றனர். இதன்காலம் கி.மு. 4000 ஆண்டையொட்டியது என அறுதியிட்டுக் கூறுகின்றனர். மேலும் மரத்தினாலும், மூங்கிலினாலும் செய்யப்பட்ட குழல் வகைகளும் அவற்றை இசைக்கும் முறையினையும் முதன் முதலில் நம் பண்டைய தமிழிசை நூல்களிலேயே அறிகிறோம். மேலும் சங்ககாலத்தில் கூறப்பட்ட தோற்கருவி கூறுதல் எனும் பொருள்பட அமைந்து இருப்பதைப் போல், மேற்கு ஆப்பிரிக்காவில் Talking Drums எனப் பாறைகளைப் பெயரிட்டு அழைப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்தில் ஆங்காங்கே ஆலயங்களில் இசைக்கல் தூண்களும், இசைக்கல் குழாய்களும், இசைக் கல்வெட்டுகளும் பரவிக் கிடப்பது தமிழிசையின் மாண்பையும் தொன்மையையும் விளக்கும். 7ம் நூற்றாண்டைச் சேர்ந்த குடுமியாமலை இசைக் கல்வெட்டில் சுரங்கங்களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. 7ம் நூற்றாண்டு மகேந்திரவர்மன் கால குடுமியாமலைக் கல்வெட்டில் உள்ளவற்றைக் கீழே தருவோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ | ஈ | ஊ | ஏ | ஏழிசைக்குச் சமமான உயிரெழுத்துக்கள் |
| ரா | ரீ | ரு | ரே | ரீ யின் நான்கு வகைகள் |
| கா | கி | கூ | கே | க யின் நான்கு வகைகள் |
| தா | தீ | தூ | தே | த யின் நான்கு வகைகள் |

பழந்தமிழ் இசைக் கருவிகளில் வெண்கலம், பித்தளை போன்ற உலோகத்தினாலான Cymbols எனப்படும், தாளக்கருவிகளின் பல வகைகள் சீனா, ஜப்பான், கொரியா, தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளில் அவர்களது இசை நாடகங்களில் (Opera) கையாளப்படுகின்றன.

இன்று மேல் நாடுகளில் சிறப்பாக நடாத்தப் பெறும் கூட்டு வாத்திய இசை அமைப்பு முறை மேனாடுகளில் செயல்படத் தொடங்கியதற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, பண்டைத் தமிழிசையில் சங்ககாலத்தில் இசைக் கருவிகள் கூட்டு இசையை ஆமந்திரிகை, பல்லியம் என அழைக்கப் பெற்று வந்தமையையும் அறியலாம், எனவே இன்று உலக இசை அரங்கில் தமிழிசை சிறப்பு இடம் பெற்றிருப்பதற்குக் காரணம், பல ஆண்டுகட்கு முன்பே தமிழிசையும், தமிழிசை இலக்கணமும், மிகுந்த வளர்ச்சியுற்று இருந்தமையே எனில் மிகையாகாது. இவ்வாறான தமிழிசையே உலகின் முதல் இசை என்பது நன்கு பெறப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி
சமரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி
**ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள்**

கலந்து கொண்ட நிகழ்வுகளின் தொகுப்பு

# செய்திக்கோவை

தொகுப்பு

**திரு. வேலுப்பிள்ளை செல்வநாயகம்**
(ஸ்ரீ சாஸ்தாபீட யாத்திரைக்குழு செயலாளர்)

*******

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சர்வதேச இந்துமத குருபீடம் நடாத்திய வவுனியா மாவட்ட ஆன்மீகப்பெருவிழாவில் ஐயப்பதாஸக்குருக்களுடன் தமிழருவி சிவகுமாரன், கலாநிதி ஜெ. திவ்வியநாதன் (EX:M.P) பிரம்மஸ்ரீ. ஜெ. சந்திரன் ஐயா மற்றும் அன்பர்கள்.



ஹல்துமுல்லை ஸ்ரீ தேவி கருமாரியம்மன் ஆலய பாலஸ்தான கும்பாபிஷேக விழாவில் கும்பம் வீதிவலம் வரும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜயப்பதாஸக் குருக்களுக்கு தர்மகர்த்தா திரு. கு. வீரசுப்பிரமணியம் பொன்னாடை போர்த்தி மகிழ்கிறார்




முன்னாள் அமைச்சர் (அமரர்) அல்ஹாஜ் A.H.M. அஷ்ரப் அவர்களுக்கு பீடாதிபதி பொன்னாடை போர்த்துகிறார்




ஸ்ரீ ஜயப்பதாஸக் குருக்களுக்கு பொன்னாடை போர்த்தி மகிழ்கிறார் மயூராபதி ஆலய குரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




லண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் ஆன்மீக உரையாற்றிய இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸ குருக்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்த போது. லண்டன் குருமார்களுடன்.




அமைச்சர் அலவி மௌலான அவர்களுக்கு தர்மகர்த்தா டி. எம். சுவாமி நாதன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்து மதகுருமார்களுடன் குருபீடாதிபதி கலந்துரையாடுகிறார்.




கொழும்பு, மாளிகாவத்தை கும்பாபிஷேக விழாவில் பிரதிஷ்டா குரு,
ஸ்ரீ ஐயப்ப தாஸக்குருக்கள் கும்பாபிஷேக மகிமை பற்றி உரையாற்றுகிறார். இந்தியா
காஞ்சிபுரம் சிவஸ்ரீ ராஜப்பா குருக்களையும் அடியார்கள் ஒரு பகுதியையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சாஸ்தாபீட பக்தர் திரு. S. பொன்னுத்துரை குருபீடாதிபதிக்கு பொன்னாடை போர்த்தி ஆசிபெறுகிறார்.



கப்பித்தாவத்தை பிரம்மஸ்ரீ பா.ஷண்முகரெட்ணசர்மா சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்களுக்கு பொன்னாடை போர்த்துகிறார். அருகில் இந்துகலாச்சார அமைச்சர் கௌரவ தி. மகேஸ்வரன், அம்பாறைமாவட்ட முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர் கௌரவ J. திவ்வியநாதன் ஆகியோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வசதி குறைந்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள் பெற்றோருடன்



வசதி குறைந்த மாணவர்களுக்கு கல்விமேம்பாட்டிற்காக மாதந்தோறும் வங்கியில் பணம் வைப்புச்செய்து வங்கிக்கணக்குப் புத்தகம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களும் ஆசிரியைகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமி மகரஜோதி விழாவில் இந்துமத குருபீடாதிபதி ஐயப்பதாஸக் குருக்கள் தலைமையில் பால்க்குடம் எடுத்துவரும் காட்சி.




வசதி குறைந்த மாணவன் ஒருவருக்கு குருபீடாதிபதி வங்கியில் பணம்வைப்புப் புத்தகம் வழங்குவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில், சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ க. சிவபாலக் குருக்கள் சிவஸ்ரீ ப. பாலசுப்பிரமணியக்குருக்கள், பிரம்மஸ்ரீ பா.ஷண்முகரெட்ணசர்மா, சிவஸ்ரீ நயினை, சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், நவாலியூர் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள், சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள், சிவஸ்ரீ. ந. சோமஸ்கந்தக் குருக்கள், சிவஸ்ரீ ஸ்ரீ காந்தக் குருக்கள் ஆகியோர்.




அகில இலங்கை ரீதியாக ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் நடாத்திய சமய இலக்கிய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ மணிகளுக்கு பரிசளிப்புவிழாவில் நவாலியூர் சாமி விஸ்வநாதக் குருக்கள் முதலாம் பரிசு பெற்ற மாணவனுக்கு தங்கப் பதக்கத்தை சூட்டுவதையும் அருகில் லண்டன் இந்துமத குருபீட அமைப்பாளர் கலாநிதி சாம்பசிவஷண்முகநாதக் குருக்கள் நிற்பதையும் முன்னாள் அமைச்சர் M.S. செல்லச்சாமி, இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் ஆகியோர் சிறப்புச்சித்தி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் சான்றிதழ்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சர்வதேச இந்துமத குருபீட ஆலோசனைக் கூட்டத்தில் பீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள், சிவஸ்ரீ பா.ஷண்முகரெட்ணசர்மா, சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள், சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள், சிவஸ்ரீ க. சிவபாலக் குருக்கள், சிவஸ்ரீ ப. பாலசுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் உட்பட 116 குருமார்கள் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




லண்டனில் நடைபெற்ற ஆன்மீக உரையின் போது அன்பர் ஒருவர் குருபீடாதிபதிக்கு மலர் மாலை அணிவித்து ஆசிபெறுகிறார்.




கலாச்சார விழா ஒன்றில் இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைக்கிறார். அருகில் அமைச்சர் A. அலவிமௌலானா, முன்னாள் மேயர் திரு. K. கணேசலிங்கம், கலைஞர் S. கந்தையா ஆகியோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சபரிமலை புனித யாத்திரைக்கான இருமுடி கட்டும் பூஜையில் இந்துமத குருபீடாதிபதி




ஜேர்மனியில் அடியார்களுடன் குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் அருகில் சர்வதேச இந்துமத குருபீடத்தின் ஜேர்மன் மாநகர் அமைப்பாளர் சிவஸ்ரீ அண்ணா தெய்வேந்திர மூர்த்திக்குருக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




லண்டன் சிவஸ்ரீ. வைத்திய நாத சுந்தரக் குருக்களுக்கு
இந்துமத குருபீடாதிபதி ஐயப்பதாஸக் குருக்கள்
சிறப்புமலரை வழங்குகிறார்



சபரிமலை ஸ்ரீ ஐயப்பசுவாமி மகரஜோதிப் பெருவிழாவில்
அமைச்சர் கௌரவ ஜயலத் ஜயவர்த்தனா யானைக்கு
மலர் தூபி வழிபாடு செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆன்மீக உரையாற்றிய ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்களுக்கு ஹொலன்ட் சிவஸ்ரீ தியாகராஜ சோமஸ்கந்தக்குருக்கள் பொன்னாடை போர்த்துகிறார்.



சுவிஸ்ஸர்லாண்ட் பாசல் ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் ஆன்மீக உரையாற்றிய சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்களுக்கு ஆலய நிர்வாகஸ்தர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜேர்மன் வூப்பெற்றால் ஸ்ரீ நவதுர்க்கைஅம்மன் ஆலயத்தில்
ஆன்மீக உரை ஆற்றிய ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள்
அவர்களுக்கு சிவஸ்ரீ. சோமஸ்கந்த ஸ்ரீகரக் குருக்கள்
பொன்னாடை போர்த்தி, மலர் மாலை அணிவிக்கிறார்.



இந்து மத குருபீடாதிபதி ஐயப்பதாஸக் குருக்கள் அவர்களுக்கு சுன்னாகம் சிவன் கோவில் பிரதமகுரு, சிவஸ்ரீ நா சர்வேஸ்வரக் குருக்கள் பொன்னாடை போர்த்துகிறார். கலாநிதி அருகில் அம்பாறைமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜெ. திவ்வியநாதன் காரைநகர் சிவஸ்ரீ சந்திரமௌனீஸ்வரக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சபரிமலையில் ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் ஆன்மீக உரையாற்றுகிறார். மாலை அணிந்த ஐயப்ப பக்தர்கள் கூட்டத்தின் ஒருபகுதியினரையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவிஸ் மாநகர் - ஸ்ரீ சாஸ்தா பீட அமைப்பாளர் திரு. தி. மகேந்திரன் தம்பதிகள் ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்களுக்கு பொன்னாடை போர்த்தி தங்கமோதிரம் அணிவித்து ஆசி பெறுகிறார்கள்.



லண்டன் - ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கையம்மன் ஆலயத்தில் ஆன்மீக உரையாற்றிய இந்துமதகுரு பீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்களுக்கு ஆலயத்தினர் சார்பில் பொன்னாடை போர்த்தி குருதெட்சனை கொடுத்து ஆசிபெறும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொட்டாஞ்சேனை ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர் வெளியீட்டில் முதல்பிரதியைப் பெறுகிறார் ஐயப்பதாஸக்குருக்கள். அருகில் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்.



யாழ். நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற ஆன்மீகப் பெருவிழாவில் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்களுடன் அன்பர்கள் சிலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலேசியா, குளம்ஆயர் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் சபரிமலை ஸ்ரீ ஐயப்பசுவாமியின் ஆலய ஸ்தூபி கும்பாபிஷேக கிரியைகளை ஸ்ரீ ஐயப்ப தாஸக்குருக்கள் நிகழ்த்துவதையும் அருகில் மயூராபதி சிவஸ்ரீ து. உதயராசவக் குருக்கள் அவுஸ்ரேலியா சிவஸ்ரீ. மு. ஸ்ரீதரக் குருக்களையும் காணலாம்.



ஜேர்மனியில் இந்துமத குருமார்களுடன் சர்வதே இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வசதிகுறைந்த மாணவர் ஒருவருக்கு வங்கியில் பணம் வைப்புச் செய்த கணக்குப் புத்தகத்தை குருபீடாதிபதி வழங்குகிறார்.




தனது மேல்படிப்பிற்கு உதவி செய்து வரும் ஐயப்பதாஸக் குருக்களிடம் ஆசிபெறும் மாணவியையும், பாடசாலை அதிபர், உப அதிபர், ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




லண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கையம்மன் கோவிலில் நடந்த ஐயப்பசுவாமி விஷேட பூஜையில் 18ம் படி தீபாராதனை செய்யும் ஸ்ரீ ஐயப்பதாஸக்குருக்கள் அருகில் சிவஸ்ரீ இராமநாத ஸ்ரீதரக்குருக்கள், சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள்.




லண்டன் ஸ்ரீ லட்சுமி நாராயணர் ஆலயத்தில் ஸ்ரீ ஐயப்பதாஸக்குருக்கள் தலமையில் விஷேட பஜனை நடைபெறுகிறது. அருகில் லண்டன் இந்துமத குருபீட அமைப்பாளர் சிவஸ்ரீ. சாம்பசிவ ஷண்முகநாத சிவாச்சாரியாரும், அடியார்கள் ஒருபகுதியினரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜேர்மன் - டோற்மூன் ஸ்ரீ சிவன் கோவிலில் ஆன்மீக உரையாற்றிய ஐயப்பதாஸக் குருக்களிடம் ஆசிபெறும் அடியார்கள். ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ அ. தேவேந்திர மூர்த்திக்குருக்கள் அடியார்களுக்கு அபிஷேக தீர்த்தம் வழங்குவதையும் காணலாம்.




சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஐயப்பதாஸக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட குருமார்களின் ஒருபகுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீட மாதரணியினர் நடாத்தும் ஸ்ரீ வரலட்சுமி விரத பூஜையில்
சுமங்கலிப் பெண்களும் கன்னிப்பெண்களும் திருவிளக்கு பூஜை செய்யும் காட்சி.




இந்துமத குருமார்களுடன் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் இந்துமத குருபீடாதிபதி
ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் குருமார்களுக்கு விளக்கமளிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வசதி குறைந்த மாணவி ஒருவருக்கு குருபீடாதிபதி ஐயப்பதாஸக் குருக்கள் வங்கிக்கணக்கு புத்தகத்தை வழங்குகிறார்.



வசதி குறைந்த மாணவர்களுக்கு கல்வி மேம்பாட்டிற்கு உதவிக்கரம் கொடுக்கும் குருபீடாதிபதியை மாணவி வணங்கி ஆசிபெறுவதையும் கலந்துகொண்டவர்களின் ஒருபகுதியினரையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் வரும் நாயன்மார்களின் பெயர்கள்

"ஸ்ரீ சாஸ்தாபீட இளவரசன்"

## ~ S. சாம்பசிவ ஸ்ரீமணிகண்ட சர்மா ~

(ஆண்டு 9 முகத்துவாரம் இந்துக்கல்லூரி மாணவன், கொழும்பு)

1. **தில்லைவாழ் அந்தணர் :**
தில்லையில் நடராசப் பெருமானுக்கு வழிபாடு புரியும் அந்தணர்கள்.

2. **திருநீலகண்டர் :**
சிவனடியார்களுக்குத் திருவோடு கொடுத்து அறம் புரிந்தவர்.

3. **இயற்பகையார் :**
சிவனடியார்களுக்கு இல்லையென்னாது எதையும் அளித்தவர்.

4. **இளையான்குடி மாறர் :**
நள்ளிரவிலும் அடியார்க்கு அமுது அளித்தவர்.

5. **மெய்பொருள் நாயனார் :**
அடியார்கள் திருவேடத்தையே மெய்ப்பொருளாகக் கொண்டவர்.

6. **விறன்மிண்ட நாயனார் :**
தேவாசிரிய மண்டபத்தே வீற்றிருந்த சிவனடியார்களை வணங்காமையால் சுந்தரரையும் பகைத்தவர்.

7. **அமர்நீதி நாயனார் :**
அடியார்க்கும் போர்வையும் அரைஞாணும் கோவணமும் வழங்கியவர்.

8. **எறிபத்த நாயனார் :**
கையிலிருந்த மழுவாயுதத்தால் சிவனடியார்களின் பகைவரைக் கொன்று சைவத்தை வளர்த்தவர்.

9. **ஏனாதிநாத நாயனார் :**
திருநீற்றின் பொலிவைக் கண்டு அதிசூரனைக் கொல்லாமல் தாமே இறந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. கண்ணப்ப நாயனார் :**
சிவபெருமானுக்கு தம் கண்களையும் கொடுத்தவர்.

**11. குங்கிலியக் கலய நாயனார் :**
நாடோறும் சிவபெருமானுக்குக் குங்கிலியத் தூபமிட்டவர்.

**12. மானக்கஞ்சாற நாயனார் :**
தம் மகளின் நீண்ட கூந்தலைச் சிவனடியாரின் பஞ்சவடிக்காக அளித்தவர்.

**13. அரிவாட்டாய நாயனார் :**
பூசைப் பொருள்கள் தவறித் தரையில் உள்ள நிலவெடிப்பில் சிந்தியமையால் தம் ஊட்டியைத் தாமே அறுக்க முனைந்தவர்.

**14. ஆனாய நாயனார் :**
பஞ்சாட்சரத்தை வேய்ங்குழலில் இசைத்து முத்தி பெற்றவர்.

**15. மூர்த்தி நாயனார் :**
சந்தனக் கட்டைக்கு முட்டு வந்த போது தம் முழங்கையைத் தேய்த்து இறைவனுக்கு காப்பிட முயன்றவர்.

**16. முருக நாயனார் :**
மலர்மாலைகள் தொடுத்து இறைவனை வழிபடும் திருப்பணியில் ஈடுபட்டவர்.

**17. உருத்திர பசுபதி நாயனார் :**
நாடோறும் திருவுருத்திர மந்திரங்களை ஓதி முத்தியடைந்தவர்.

**18. திருநாளைப் போவார் நாயனார் :**
தாழ்ந்த குலத்தில் தோன்றியவர்; தில்லையில் தீக்குள் புகுந்து முத்தியடைந்தவர்.

**19. திருக்குறிப்பு தொண்டர் நாயனார் :**
அடியார்களின் ஆடைகளை அழுக்கு நீக்கி உதவியவர்.

**20. சண்டேசுவர நாயனார் :**
சிவபூசைக்குரிய பாற்குடங்களை உதைத்த தந்தையின் காலை வெட்டியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21. திருநாவுக்கரசு சுவாமிகள் :**
சைவமும் தமிழும் தழைக்கத் தேவாரம் பாடியவர். புறச்சமய இருளை நீக்கியவர்.

**22. குலச்சிறை நாயனார் :**
பாண்டியவர் மன்னனின் முதல் அமைச்சராக இருந்து சைவ நெறியைக் காத்தவர்.

**23. பெருமிழலைக் குறும்ப நாயனார் :**
சுந்தரமூர்த்தி நாயனாரையே தொழுது அவரோடு சிவப்பேறு பெற்றவர்.

**24. காரைக்காலம்மையார் :**
இறைவனருளால் மாயமாங்கனி பெற்றவர். தலையால் நடந்து கைலாசம் சென்றவர்.

**25. அப்பூதியடிகள் :**
திருநாவுக்கரசரின் திருப்பெயரை ஓதிச் சிவப்பேறு பெற்றவர்.

**26. திருநீலநக்க நாயனார் :**
திருநாவுக்கரசரின் திருப்பெயரை ஓதிச் சிவப்பேறு பெற்றவர்.

**27. நமிநந்தியடிகள் :**
சமணர்கள் எண்ணெய் தர மறுத்தமையால் குளத்து நீரையே கொண்டு விளக்கு எரித்தவர்.

**28. திருஞானசம்பந்தர் :**
ஞானப்பால் உண்டவர்; மூன்று வயதில் தேவாரம் பாடிச் சைவமும் தமிழும் தழைக்கச் செய்தவர்.

**29. ஏயர்கோன் கலிக்காம நாயனார் :**
சுந்தரர் சிவபெருமானைத் தூதனுப்பியதால் அவரைப் பகைத்துப் பின்னர் சூலை நோய் அடைந்து சுந்தரரின் தொடர்பைப் பெற்றவர்.

**30. திருமூல நாயனார் :**
திருமந்திரம் பாடிய சித்தர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**31. தண்டியடிகள் நாயனார் :**

திருவாரூர்க் கமலாலயக் குளத்தைத் திருத்தும் பணியில் ஈடுபட்டவர்.

**32. மூர்க்க நாயனார் :**

சூதாடி வென்ற பொருளால் சிவனடியார்கட்கு அன்னதானம் செய்தவர்.

**33. சோமாசி மாற நாயனார் :**

சிவ வேள்விகள் புரிந்த சுந்தரரை வழிபட்டுச் சிவபதம் அடைந்தவர்.

**34. சாக்கிய நாயனார் :**

நாடோறும் கற்களையே மலராக சிவலிங்கத்தின் மீது எறிந்து தம் பக்தியை தத்தம் செய்தவர்.

**35. சிறப்புலி நாயனார் :**

திருவைந்தெழுத்தை ஓதித் தாம் புரிந்த வேள்வியைச் சிவபெருமானுக்கே தத்தம் செய்தவர்.

**36. சிறுத்தொண்ட நாயனார் :**

இல்லை என்னாமல் பிள்ளைக்கறி சமைத்துச் சிவனடியாரை வழிபட்டவர்.

**37. கழறிற்றறிவார் நாயனார் :**

உழமண் பூசிய சலவைத் தொழிலாளனைச் சிவவேடத்தை நினைவூட்டியதாக வணங்கியவர்.

**38. கணநாத நாயனார் :**

திருஞானசம்பந்தரை வழிபட்டுத் திருக்கயிலையை அடைந்தவர்.

**39. கூற்றுவ நாயனார் :**

நடராசப் பெருமானின் திருவடியே தம் மணிமுடியாக வழிபட்டவர்.

**40. பொய்யடிமையில்லாத புலவர் :**

கடைச் சங்ககால புலவர் நாற்பத்தொன்பதின்மர்.

**41. புகழ்ச்சோழ நாயனார் :**

தாம் வெட்டிய பகையரசர்களின் தலையொன்று சடைமுடி தரித்திருப்பதை அறிந்து மனநொந்து தீப்புகுந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**42. நரசிங்கமுனையரைய நாயனார் :**

போலிச் சிவனடியாரிடமும் அன்பு காட்டிய பெருந்தகையார்.

**43. அதிபத்த நாயனார் :**

நாடோறும் தம் வலையில் அகப்படும் முதல் மீனை இறைவனுக்குப் படைத்தவர்.

**44. கலிக்கம்ப நாயனார் :**

சிவவேடங்கொண்ட பணியாளனையும் வழிபட்டவர்.

**45. கலிய நாயனார் :**

எண்ணெய்யும் விறகும் இல்லாதபோது தலைமயிரையும் எரித்துக் கோயிலில் ஒளியுண்டாக்கியவர்.

**46. சத்தி நாயனார் :**

சிவனடியார்களை இகழ்ந்தவர் நாவைத் தண்டாயம் என்னும் குறடுபோலும் கருவியால் இழுத்துக் கத்தியால் அரித்தவர்.

**47. ஐயடிகள் காடவர்கோண் நாயனார் :**

ஆட்சியைத் துறந்து சிவத்தலங்களை வழிபட்டு "க்ஷேத்திரத் திருவெண்பா என்னும் நூலை இயற்றியவர்."

**48. கணம்புல்ல நாயனார் :**

கணம்புல்லை விற்றுத் தீபத் திருப்பணி புரிந்தவர்.

**49. காரி நாயனார் :**

காரிக்கோவை என்னும் நூல் இயற்றி அதன் ஊதியத்தைக் கொண்டு தமிழ்ப்பணி புரிந்தவர்.

**50. நிறைசீர் நெடமாற நாயனார் :**

சமண சமயத்தவராக இருந்து திருஞானசம்பந்தரால் சைவ சமயத்துக்குத் திரும்பப் பெற்றவர்.

**51. வாயிலார் நாயனார் :**

சிவபெருமானுக்கு மனத்தினாலேயே திருக்கோயில் அமைத்து திருமஞ்சனம், தூபதீபம் செய்து வந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**52. முனையடுவார் நாயனார் :**

பகைவர்களை வென்று திரட்டிய பொருளை அடியார்களுக்கு வழங்கியவர்.

**53. கழற்சிங்க நாயனார் :**

பூமண்டபத்தில் கீழே இருந்த மலரை முகர்ந்து பார்த்த தம் மனையியாரின் கையை வெட்டியவர், பல்லவ மன்னர்.

**54. இடங்கழி நாயனார் :**

தம் செல்வத்தையும் அம்பாரத்தையும் சிவனடியார்கள் கொள்ளை கொள்ள விட்டுவிட்ட ஒரு குறுநில மன்னர்

**55. செருந்துணை நாயனார். :**

கழற்சிங்கரின் மனைவி பூமண்டபத்திலிருந்த மலரை முகர்ந்து பார்த்ததால் அவ்வம்மையாரின் மூக்கையறுத்தவர்.

**56. புகழ்த்துணை நாயனார் :**

சிவபெருமான் திருவருளால் பஞ்சத்தில் நாடோறும் ஒவ்வொரு பொற்காசு பெற்றவர்.

**57. கோட்புலி நாயனார் :**

சிவபெருமானுக்கும் படைப்பதற்காகத் தாம் சேமித்து வைத்த நெல்லை உண்டசுற்றத்தினரைக் கொன்று நேர்மையை நிலைநாட்டியவர்.

**58. பத்தராய்ப் பணிவார் :**

திருவாரூரில் புற்றிடங்கொண்ட பெருமானை வழிபட்ட தொகையடியார்கள்.

**59. பரமனையே பாடுவார் :**

சிவபெருமானையே பரம் பொருளாகப் பாடுபடுவர்கள்.

**60. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர் :**

சிவயோக நெறியில் சித்தத்தை வைத்து முத்தியடைந்தவர்கள்

**61. திருவாரூர்ப் பிறந்தார் :**

திருக்கயிலாயத்தில் உள்ள சிவகணங்களே இவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**62. முப்போதும் திருமேனி தீண்டுவார் :**

மூன்று காலங்களிலும் சிவபெருமானை அர்ச்சித்த அந்தணர்கள்

**63. முழுநீறு பூசிய முனவர் :**

உடல் முழுவதும் திருநீறு பூசியவர்கள்

**64. அப்பாலும் அடிச்சார்ந்தார் :**

முத்தமிழ் நாடுகளுக்கு அப்பால் உள்ள நாடுகளில் வாழ்ந்த சிவனடியார்கள்

**65. பூசலார் நாயனார் :**

மனக்கோயில் கட்டிச் சிவபெருமானை பிரதிட்டை செய்தவர்.

**66. மங்கையர்க்கரசியார் :**

நின்றசீர் நெடுமாறனாரின் மனைவியார்; திருஞானசம்பந்தரை மதுரைக்கு வரவேற்று தம் கணவரைச் சைவராக்கினவர்.

**67. நேச நாயனார் :**

சிவனடியார்களுக்கு உடை, கோவணம் முதலியன கொடுத்துக் காத்தவர்.

**68. கோச்செங்கட் சோழ நாயனார் :**

திருவானைக்கா திருமதில் பணிகளைச் செய்தவர்.

**69. திருநீலகண்ட யாழ்ப்பாணர் :**

திருஞானசம்பந்தரின் பாடல்களை யாழில் அமைத்துப் பாடியவர்.

**70. சடைய நாயனார் :**

சுந்தரரின் தந்தையார்.

**71. இசை ஞானியார் :**

சுந்தரரின் அன்னையார்.

**72. சுந்தரமூர்த்தி நாயனார் :**

சடையனார், இசை ஞானியர் ஆகியோரின் மைந்தர்; சிவபெருமான் தோழர்; தேவாரம் பாடி செந்தமிழ் வளர்த்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்ஜோதி..........

# சிறுவர் பகுதி

- ஸ்ரீ லக்ஷ்மீப்ரதா -

## அம்மா சொன்னது உண்மையே

வீட்டுக்கு அப்பாலே, ஒரு காடு. அந்தக் காட்டுக்கு அந்தப் பக்கத்திலே, ஓர் ஊர். அந்த ஊரிலே, ஒரு பள்ளிக்கூடம். அந்தப் பள்ளிக் கூடத்திலே, நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான், கண்ணன்.

காட்டைச் சுற்றிக் கொண்டு போகும் நெடுஞ்சாலை வழியே சென்றால், வீட்டுக்கும் பள்ளிக் கூடத்திற்கும் வெகு தூரம். நடந்து செல்வதற்கும் ரொம்ப நேரமாகும்.

காட்டின் குறுக்கே ஓர் ஒற்றையடிப் பாதை. அந்தப் பாதை வழியே நடந்து, இடையிலுள்ள மலையைக் கடந்ததும், பள்ளிக் கூடத்துக்குச் சுருக்காகப் போய் விடலாம்.

சில நாட்கள் வரை..........

கண்ணனை அழைத்துப் போய் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டு வருவார், மறுபடி, மாலையில் பள்ளிக் கூடத்திலிருந்து அழைத்து வருவார். அம்மா.

பழக்கப்பட்ட பிறகு

அந்தக் காட்டின் குறுக்கு வழியாகத் தன்னந்தனியே நடந்து, பள்ளிக்கூடத்திற்குப் போய் வந்து கொண்டிருந்த கண்ணன் -

ஒரு நாள்.

'அம்மா.....' என்றான், கண்ணன்.

'என்னடா....?' என்றார், அம்மா.

'எனக்குப் பயமாயிருக்கிறது......' என்றான், கண்ணன்.

'என்ன பயம்......?' எனப் பரிவுடன் விசாரித்தார், அம்மா.

'இல்லைம்மா... வந்து... அந்தக் காட்டு வழியில், சில சமயங்களில் யாரேனும் ஒருவர், இருவர் வருகிறார்கள். போகிறார்கள். சில நேரங்களில் யாரையுமே காண முடிவதில்லைம்மா... அப்போது.... எனக்கு ரொம்பப் பயம்ம்.... ம்மாயிருக்கும்!' என்றான், கண்ணன்.

'பயப்படாதே!... தைரியமாக இரு!....' எனக் குறுஞ் சிரிப்புடன் சொன்னார், அம்மா.

சட்டென்று ஏதோ.... ஞாபகப்பட்ட பதைப்பில், 'அம்மா... ஒரு நாள் மாலை நேரத்தில் பள்ளிக் கூடத்திலிருந்து வந்து கொண்டிருக்கையில், அந்த மலையடிவாரத்திலுள்ள ஒரு பள்ளத்திலிருந்து ஒரு குள்ள நரி, என்னைப் பார்த்து, இஇஈஈ எனப் பல்லை இளித்தது! உ உ ஊஊ - என ஊளையிட்டதும்மா!.... என்று அச்சமும், அதிர்ச்சியுமாகக் கூறினான், கண்ணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கேட்ட நொடியே

'கண்ணா!.... என் செல்வமே!...இதற்கெல்லாம் நீ பயப்படாதே!.... பயப்படும்போது, கிருஷ்ணா! ஓ...... கிருஷ்ணா! - எனக் கூவு. உடனே கிருஷ்ணன் வந்து, உன்னைக் காப்பாற்றுவான்!...' என்றவாரே கண்ணனை நெஞ்சோடு அணைத்துக் கொண்டார், அம்மா.

'கிருஷ்ணா.....? அது யார்.....? எனப் புரிஜயாமல் கேட்டான். கண்ணன்.

'கிருஷ்ணன் - என்பது, கடவுளின் ஆயிரம் பெயர்களுள் ஓர் இனிய பெயர். யாரும், எந்த நேரத்திலும் அவரை அன்புடன் அழைக்கிற நொடியே, ஓடோடி வந்து காப்பாற்றுவார்!' என்று கனிவுடன் சொன்னார், அம்மா.

அப்புறம் -

நாலைந்து நாட்களுக்குப் பிறகு -

ஒரு நாள், மாலை நேரத்தில் -

வானம் மப்பும் மந்தாரமுமாயிருந்தது.

காற்றுச் சில்லெனத் தழைத்தது.

காட்டு வழியில் வீட்டுக்குப் போய்க்கொண்டிருக்கிற கண்ணன், அஞ்சினான். 'ஆ!.... மழை பெய்யத் தொடங்கிவிட்டால், எங்கே ஒதுங்குவது.....? வீட்டுக்கு எப்படிப் போவது....? எனத் தயங்கியவன், வேகமாக நடந்தான்.

மலையடிவாரத்தைக் கடந்து கொண்டிருக்கையில்-

மழை, மெல்லத் துளிர்த்தது!....

சட்டென்று பாய்ந்து, அருகிலுள்ள ஒரு மரத்தடிக்குப் பாய்ந்து ஒதுங்கிய கண்ணன், அழவில்லை. அழுகையை அடக்கிக் கொண்டு, நம்பிக்கையுடன் கூவினான் : 'ஓ... கிருஷ்ணா! கிருஷ்ணா! கிருஷ்ணா!.....நாள் வீடு போய்ச் சேருவதற்கு உதவி செய்.....'

அடுத்த நொடி-

'என்னடா, தம்பீ!....' என்றவாறே தாவியோடி வந்தான். கண்ணனை அணுகினான். 'என்னையா கூப்பிட்டாய்.....?' எனப் புன்சிரிப்புடன் கேட்டான், காட்டில் மாடு மேய்க்கிற சிறுவன்.

கண்ணன் பார்த்தான்.

நாலைந்து பசுக்கள் தத்தம் கன்றுகளுடன் ஒற்றையடிப் பாதையில் நடந்து கொண்டிருந்தன.

தலையில் பாகையும், கையில் தடியுமாக நிற்கிற சிறுவனைக் கவனித்தபடியே, 'உன் பெயர் கிருஷ்ணனா...? எனக் கேட்டான்.

'ஆமாம்.....' என்றான், அவன்.

'மழை தூறுகிறது வீட்டக்குப் போக.....'

'மழை வராது வா. வீட்டுக்குப் போகலாம்......' என்றவாறு கண்ணனை அழைத்துக் கொண்டு பசுக்களைத் தொடர்ந்து நடந்தான், கிருஷ்ணன்.

'அம்மா சொன்னது, உண்மைதான்!....' என்று மனசுக்குள் எண்ணிய படியே கிருஷ்ணனுடன் தைரியமாகச் சென்றான், கண்ணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையர் பகுதி - - மங்கையர் பகுதி



## மங்கல மங்கையர்க்கு சில அறிவுரை

~ குருஜீ ~

1. தினமும் ஸ்நானம் செய்யும் முன் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்து கீழ்க்காணும் மந்திரத்தைச் சொல்லி ஸ்நானம் செய்யுங்கள்.

**கங்கேச ஜமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி**
**நர்மதா சிந்து காவேரி ஜலேஸ்மின் - சன்னிதிம் குரு:**

கெங்கா முதல் காவேரிவரையுள்ள புண்ணிய நதிகளில் ஸ்நானம் செய்வதாக மனதில் நினைத்தால் அந்த புனித நதிகளில் ஸ்நானம் செய்த பலன் உண்டாகும்.

2. வீட்டில் ஏதாவது பொருள் தீர்ந்துவிட்டால் - "இல்லை" இல்லை, என்று சொல்லக் கூடாது. இது வேண்டும். இது வேண்டும் என கூறுங்கள்.
(உ + ம் - அரிசி வாங்கவேண்டும், பருப்பு வாங்க வேண்டும்)

3. இரவு வேளையில் வீட்டை பெருக்கக்கூடாது. இரவில் வீட்டை பெருக்கி கூட்ட வேண்டிய அவசியம் வந்தால், பெருக்கிய குப்பைகளை ஒரு புறமாக வைத்துவிட்டு மறுநாள் காலையில் வெளியில் போடுங்கள். இரவில் கூட்டிய குப்பைகளை வெளியில் போடக்கூடாது.

4. தினமும் காலை, மாலை வேளைகளில் வீட்டு வாசலில் மஞ்சள்நீர் தெளித்து மங்கல கோலமிடுங்கள், அல்லது சுவாமி அறையில் மங்கள கோலமிடுங்கள். வீட்டில் இடவசதியுள்ளவர்கள் முற்றத்தில் துளசிச்செடியை நாட்டி மஞ்சள் நீர் வார்த்து துளசிக்குமுன் கோலமிட்டு வாருங்கள். எல்லாவித துன்பங்களும் விலகுவதோடு லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தினமும் சுவாமி அறையில் விளக்கேற்றுமுன் தீபத்தை சுத்தம்செய்து சந்தண, குங்கும திலகமிட்டு அக்ஷதை (அக்ஷதை - மஞ்சள் கலந்த அரிசி) இட்டு மலர்களினால் அலங்கரித்து, பட்டுத் துணி சாத்தி, கீழ்க்காணும் சுலோகத்தை சொல்லி தீபத்தை ஏற்றுங்கள்.

**சர்வ மங்கல மாங்கல்யே சிவே சர்வார்த்த ஸாதகே**
**சரண்யே த்ரியம்பஹே தேவீ நாராயணீ நமோஸ்துதே**

**சுபம்பவது கல்யாணம் ஆரோக்ய தனசம்பத**
**சர்வ சத்ரு விநாசாய தீபஜ்ஜோதி நமோஸ்த்துதே**

**ஆயுர்தேஹி தனந்தேஹி வித்யாம் தேஹி நமோஸ்துதே**
**ஸமஸ்த்த மஹிலாம் தேவி தேஹிமே பரமேஸ்வரி**

எல்லாவித மங்களத்தையும், நித்ய சுமங்கலியாக வாழ மாங்கல்ய பலத்தையும், ஆரோக்கயமான வாழ்வையும், செல்வம் முதலான அஷ்ட ஐஸ்வர்யத்தையும், நுண்ணிய அறிவையும், எல்லாவிதமான சத்ரு (விரோதம்) க்களை போக்கக்கூடியதும், அனைத்து பாவங்களை நீக்கி க்ஷேமமான வாழ்வைத் தரக்கூடிய ஜ்யோதிவடிவான தீப லக்ஷ்மியைப் பிரார்த்தித்து அருள்பெறுவோம். வெற்றிலை, பழம், கற்கண்டு, பால் இவற்றில் ஒன்றை வைத்து நெய்வேத்தியம் செய்து சாம்பிராணி, கற்பூர ஆராதனை செய்து வழிபடுங்கள் லக்ஷ்மிகடாக்ஷம் உண்டாகும்.

6. தீபங்களை ஏற்றும்போது ஏகமுகதீபம், அல்லது பஞ்சதீபம் சிறப்பானது. (ஏகம்-ஒன்று, பஞ்ச-ஐந்து)

7. எள் எண்ணெய் - (நல்லெண்ணை) இலுப்பை எண்ணெய் கலந்து விளக்கு ஏற்றினால் "ரோக நிவாரணம்" நோய் அகலும்.

8. பசுநெய் கொண்டு விளக்கேற்றினால் "தனவிருத்தி" செல்வம் செழிக்கும்.

9. பசுநெய், இலுப்பை எண்ணெய், வேப்ப எண்ணெய், எள் எண்ணெய் ஆமணக்க எண்ணெய் ஆகிய ஐந்தையும் சமஅளவு கலந்து விளக்கேற்றினால். "சத்ரு ஜெயம்" எதிரிகளை வெல்லலாம்.

10. பசும்நெய், இலுப்பை எண்ணெய் சமஅளவு கலந்து விளக்கேற்றினால். "ஆயுள்விருத்தி" நீண்டகாலம் சுகமாக வாழலாம்.

11. தீபத்தை கிழக்கு முகமாக அல்லது வடக்கு முகமாக ஏற்றிவைப்பது சிறப்பைத் தரும். எவர்சில்வர் விளக்குகள் பூஜை, வழிபாட்டிற்கு ஏற்றதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஏற்றிய தீபத்தை அணைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் லக்ஷ்மியை மனத்தில் எண்ணிக் கொண்டு ஒரு பூ எடுத்து ஒற்றி அணைக்க வேண்டும். (வெறுங்கையினாலோ. வாயினால் ஊதியோ அணைக்கக்கூடாது)

13. சுவாமி அறையில் சுவாமிப்படங்கள் கிழக்குமுகமாக, அல்லது வடக்கு முகமாக வைத்து வழிபட வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் "தெற்குப்பக்கமாக" சுவாமிப்படங்கள் வைக்கக் கூடாது.

14. சுவாமி அறையில் தெய்வங்களின் படங்களுடன், அமரத்துவம் அடைந்தவர்களின் படங்களை சேர்த்து வைத்து வழிபடுவது கூடாது. (அமரத்துவம் - இறந்த பெற்றோர்களின் படங்களை தனியாகவே வைத்து விளக்கேற்ற வேண்டும்)

15. சுவாமி அறையில் கிழக்கு, அல்லது வடக்கு முகமாக வைக்கும் படங்களில் முதலில் விநாயகர், நடுவே லக்ஷ்மீ. அடுத்து வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் ஆகிய மூன்று படங்களும் அவசியம்.


விநாயகர்


மஹாலக்ஷ்மி


சுப்பிரமணியர்


விநாயகர்


லக்ஷ்மி


நாராயணன்
(வெங்கடாசலபதி)


சுப்பிரமணியர்


சரஸ்வதி

வீடுகளில் உட்கார்ந்த பாவனையிலுள்ள சுவாமிப்படங்களே வைத்து வழிபடுவது உத்தமம்.

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தானங்களும் அதன் பலன்களும்
## ~ குருஜீ ~

| | | |
|---|---|---|
| அன்னதானம் செய்தால் | ~ | கஷ்டங்களும், கடனும் தீரும் |
| அரிசி தானம் செய்தால் | ~ | பாவங்களைப் போக்கும் |
| நெய் தானம் செய்தால் | ~ | நோய் தீரும் |
| பால் தானம் செய்தால் | ~ | துக்கம் நீங்கும் |
| தயிர் தானம் செய்தால் | ~ | உடல் ஆரோக்யம் விருத்தியாகும் |
| தேங்காய் தானம் செய்தால் | ~ | காரியம் நிறைவேறும் |
| பழங்களை தானம் செய்தால் | ~ | நல்ல அறிவு ஏற்படும் |
| தேன் தானம் செய்தால் | ~ | புத்திர பாக்கியம் உண்டாகும் |
| நெல்லிக்கனி தானம் செய்தால் | ~ | நல்ல ஞானம் உண்டாகும் |
| வஸ்திர தானம் செய்தால் | ~ | ஆயுளை விருத்தி செய்யும் |
| தங்கத்தில் தாலிதானம் செய்தால் | ~ | குடும்ப தோகூம் நீங்கி ஆனந்தம் உண்டாகும். |
| வெள்ளியில்தானம் செய்தால் | ~ | மனக்கவலைகள் நீங்கும் |
| தீபத்தை தானம் செய்தால் | ~ | கண்பார்வை கூர்மையாகும் |

**பிரதிபலனை எதிர்பார்த்து செய்வது 'தானம்'**
**பிரதிபலன் எதிர்பாராமல் செய்வது 'தர்மம்'**

தானத்தில் சிறந்தது "கன்னிகாதானம்" இது எல்லோருக்கும் கொடுத்து வைப்பதில்லை தான் ஒரு பெண்ணை மணந்து அவள் மூலம் ஒரு பெண்ணைப் பெற்று வளர்த்து அந்த "கன்னியை" தானமாகக் கொடுப்பதற்கு இறை அருள் நிச்சயம் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்ஜோதி வினா-விடை

**1. வினா:- இந்துமதத்தின் ஆதார நூல் ஏது?**
விடை:- ஆதார நூல் வேதம் (சிறப்பு நூல் ஆகமம்)

**2. வினா:- இந்துமதத்தின் பிரிவுகள் எத்தனை?**
விடை:- பிரிவுகள் ஆறு அவையாவன.
1. சைவம்
2. வைஷ்ணவம்
3. சாக்தம்
4. காணபத்யம்
5. கௌமாரம்
6. சௌரம்

**3. வினா:- சைவசமயத்தவர்களின் முழுமுதற் கடவுள் யார்?**
விடை:- சிவபெருமான் (சிவன்)

**4. வினா:- சைவசமயத்தவர்களின் சிவசின்னங்கள் எவை?**
விடை:- விபூதி, உருத்திராஷம்

**5. வினா:- வீபூதியைக் குறிக்கும் வேறு பெயர்கள் எவை?**
விடை:- திருநீறு, பஸ்மம், பஸிதம், க்ஷாரம்

**6. வினா:- சமயக் குரவர்கள் யாவர்?**
விடை:- திருஞானசம்பந்த மூர்த்திநாயனார்
திருநாவுக்கரசு நாயனார்
சுந்தரமூர்த்தி நாயனார்
மாணிக்கவாசக சுவாமிகள்

**7. வினா:- சைவசமயத்தின் நான்குபாதங்கள் எவை?**
விடை:- சரியை, கிரியை, யோகம், ஞானம்

**8. வினா:- நால்வகை முத்திகள் எவை?**
விடை:- சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுஜ்யம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9. வினா:- நால்வகை புருஷார்த்தம் எவை?**

விடை:- தர்ம-அர்த்த, காமிய-மோசஷம்
(அறம்-பொருள்- இன்பம்-வீடு)

**10. வினா:- தெய்வ நிலையில் வைத்து போற்றுதலுக்கு உரியவர்கள் யாவர்?**

விடை:- மாதா, பிதா, குரு.

**11. வினா:- இறைவன் இருப்பிடத்தை எவ்வாறு அழைப்பர்?**

விடை:- ஆலயம், கோவில், தேவஸ்தானம்

**12. வினா:- ஆலயம் என்பதன் பொருள் என்ன?**

விடை:- ஆ + லயம் - ஆ: ஆன்மாக்கள்
லயம் : (இறைவனுடன்) லயப்படும் இடம்.

**13. வினா:- கோவில் என்பதன் பொருள் என்ன?**

விடை:- கோ + இல் : கோவில்
கோ:- இறைவன்
இல்:- இருப்பிடம் (இல்லம்)

**14. வினா:- தேவஸ்தானம் என்பதன் பொருள் என்ன?**

விடை:- தேவ + ஸ்தானம்
தேவ:- இறைவனின்
ஸ்தானம்:- இருப்பிடம்

**15. வினா:- மனிதனுக்கு வேண்டிய நற்பண்புகள் சில**

விடை:- அன்பு, அறிவு, பண்பு, பணிவு, துணிவு, பரிவு, பாசம்.

**16. வினா:- சோதிடம் மனிதவாழ்க்கையில் எவ்வாறு மதிக்கப்படுகிறது?**

விடை:- மனிதனுடைய பிறப்பு முதல் - இறப்பு வரை நடைபெறும் சுப-அசுப-காரியங்களை அறிவதற்கு உறுதுணையாக விளங்குவதால் மிகவும் புனிதமாக மதிக்கப்படுகிறது.

**17. வினா:- சோதிடம் கணிப்பதற்கு முக்கியமானது எது?**

விடை:- பஞ்சாங்கம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**18. வினா:-** **பஞ்சாங்கம் என்பதன் பொருள் என்ன?**

விடை:- திதி, வார, நஷத்திர, யோக, கரணம், ஆகிய ஐந்து உறுப்புக்களைக் கொண்டது (பஞ்ச + அங்கம்) பஞ்சாங்கமாகும்.

**19. வினா:-** **திதிகள் எத்தனை? அவை எவை?**

விடை:- திதிகள் பதினைந்தாகும் (15-திதிகள்) அவையாவன

1. பிரதமை 7. ஸப்தமி 12. துவாதசி
2. துதியை 8. அட்டமி 13. திரயோதசி
3. திருதியை 9. நவமி 14. சதுர்த்ததி
4. சதுர்த்தி 10. தசமி 15. அமாவாசை (அல்லது) பௌர்ணமி
5. பஞ்சமி 11. ஏகாதசி
6. ஷஷ்டி

**20. வினா:- வாரம் எத்தனை நாட்களைக் கொண்டது அவை எவை?**

விடை:- ஏழு நாட்களைக் கொண்டது ஒரு வாரமாகும்.

1. ஞாயிறு 5. வியாழன்
2. திங்கள் 6. வெள்ளி
3. செவ்வாய் 7. சனி
4. புதன்

**21. வினா:-** **ஏழு நாட்களைக் குறிக்கும் சமஸ்கிருத பெயர் என்ன?**

விடை:-

1. பானுவாஸரம் - ஞாயிற்றுக்கிழமை
2. சோமவாஸரம் - திங்கட்கிழமை
3. மங்களவாஸரம் - செவ்வாய்க்கிழமை
4. புதவாஸரம் - புதன்கிழமை
5. குருவாஸரம் - வியாழக்கிழமை
6. சுக்கிரவாஸரம் - வெள்ளிக்கிழமை
7. மந்தவாஸரம் - சனிக்கிழமை

**22. வினா:-** **நக்ஷத்திரங்கள் எத்தனை? அவை எவை?**

விடை:- நக்ஷத்திரங்கள் 27 ஆகும். அவையாவன.

| | **தமிழ்ப்பெயர்** | **சம்ஸ்கிருதப்பெயர்** |
|---|---|---|
| 1. | அச்சுவினி | ஆஸ்விஜ |
| 2. | பரணி | அபபரணி |
| 3. | கார்த்திகை | க்ருத்திகா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 4. | ரோஹிணி | ரோஹிணி |
| 5. | மிருகசீருடம் | ம்ருகசீருஷ |
| 6. | திருவாதிரை | ஆருத்ரா |
| 7. | புனர்பூசம் | புனர்வஷ" |
| 8. | பூஷம் | புஸ்ய |
| 9. | ஆயிலியம் | ஆஸ்லேச |
| 10. | மகம் | மாக |
| 11. | பூரம் | பூரபல்குனி |
| 12. | உத்தரம் | உத்தரபல்க்குனி |
| 13. | அத்தம் | ஹஸ்தம் |
| 14. | சித்திரை | சைத்ரா |
| 15. | சுவாதி | ஸ்வாதி |
| 16. | விசாசம் | வைசாக |
| 17. | அனுஷம் | அனுராதா |
| 18. | கேட்டை | ஜேஷ்டை |
| 19. | மூலம் | மூல |
| 20. | பூராடம் | பூர்வாஷாடா |
| 21. | உத்தராடம் | உத்தராஷாடா |
| 22. | திருவோணம் | ச்ரவண |
| 23. | அவிட்டம் | ச்ரவிஷ்டா |
| 24. | சதயம் | சதபிதங் |
| 25. | பூரட்டாதி | பூர்வப்ரோஷபதா |
| 26. | உத்தரட்டாதி | உத்தரப்ரோஷபதா |
| 27. | ரேவதி | ரேவதி |

**23. வினா:- யோகம் எத்தனை? அவை எவை?**

விடை:- யோகங்கள் 27 ஆகும். அவையாவன.

| | | | |
|---|---|---|---|
| 1. | விஷ்கம்பம் | 14. | அரிஷணம் |
| 2. | பரீதி | 15. | வச்சிரம் |
| 3. | ஆயுஷ்மான் | 16. | சித்தி |
| 4. | சௌபாக்கியம் | 17. | வியதீபாதம் |
| 5. | சோபனம் | 18. | வரியான் |
| 6. | அதிகண்டம் | 19. | பரிகம் |
| 7. | சுகர்மம் | 20. | சிவம் |
| 8. | திருதி | 21. | சித்தம் |
| 9. | சூலம் | 22. | சாத்தியம் |
| 10. | கண்டம் | 23. | சுபம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. விருத்தி
12. துருவம்
13. வியாகாதம்
24. சுப்பிரம்
25. பிராமியம்
26. மாகேந்திரம்
27. வைதிருதி

**24. வினா:- கரணங்கள் எத்தனை? எவை?**

விடை:- கரணங்கள் 11 ஆகும் (இதில் முற்கரணம்-பிற்கரணம் உண்டு)

1. பவகரணம்
2. பாலவகரணம்
3. கௌளவகரணம்
4. தைதுவகரணம்
5. கரஜைகரணம்
6. வணிக்கரணம்
7. பத்திரகரணம்
8. சகுனிகரணம்
9. சதுஷ்பாதகரணம்
10. நாகவகரணம்
11. கிம்ஸ்துக்ன

**25. வினா:- கிரகங்கள் எத்தனை? அவை எவை?**

விடை:- கிரகங்கள் ஒன்பது (நவகிரகம்) நவ-ஒன்பது)

1. சூரியன்
2. சந்திரன்
3. செவ்வாய்
4. புதன்
5. குரு
6. சுக்கிரன்
7. சனி
8. ராகு
9. கேது.

**26. வினா:- உருத்திராக்ஷம் எப்படி தோன்றியது?**

விடை:- சிவபெருமான் திரிபுர தகனம் செய்யும் போது உடலிலிருந்து ஏற்பட்ட வியர்வை பூமியில் விழ அதிலிருந்து ஒரு விருக்ஷம் (மரம்) உண்டானது. என்றும் அதுவே ருத்திராக்ஷமரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மரம் எனது அம்சமானது இதன் காய்களை அணிபவர்களின் பாபங்களைப் போக்குகிறேன் என ஈசன் அருளியதாக பத்மபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

**27. வினா:-** **உருத்திராக்ஷ மணிக்கு நிறங்கள் உண்டா?**
விடை:- ஆம் வெள்ளை, சிவப்பு, மஞ்சள், கறுப்பு நிறங்கள் உண்டு. ஆயினும் அதிகப்படியாக விளைவது சிவப்பு, கறுப்பு ருத்திராக்ஷங்களே

**28. வினா:-** **உருத்திராக்ஷ மரம் விளையும் இடங்கள் எவை?**
விடை:- ஹிமாலயம், ஜாவாத்தீவு, நேபாளம் ஆகிய இடங்களில் அதிகமாக விளைகிறது.

**29. வினா:-** **சிவவழிபாட்டுக்கு ஜீவஸ்தானமாகவுள்ள மஹா மந்திரம் எது?**
விடை:- நமசிவாய எனும் பஞ்சாக்ஷரமாகும்.

**30. வினா:-** **பஞ்சாக்ஷரம் எத்தனை வகைப்படும்? அவை எவை?**
விடை:- பஞ்சாக்ஷரம் ஐந்து வகைப்படும் அவையாவன?
1. ஸ்தூல பஞ்சாக்ஷரம் - (நமசிவாய)
2. சூக்ஷம பஞ்சாக்ஷரம் - (சிவாயநம)
3. காரண பஞ்சாக்ஷரம் - (சிவாய சிவ)
4. மகா காரண பஞ்சாக்ஷரம் - (சிவ)
5. மகா மனு பஞ்சாக்ஷரம் - (சி)

**31. வினா:-** **உபதேச வாயிலாக அறியப்பட வேண்டிய பஞ்சாக்ஷ ரத்தின் விளக்கம் என்ன?**
விடை:- சிகாரம் - சிவம் நகாரம் - திரோதம்
வகாரம் - அருள் மகாரம் - மலம்
யகாரம் - ஆன்மா

**32. வினா:-** **நமசிவாய என்னும் மகா மந்திரத்தில் "நம" எனும் பதம் எதனைக் குறிக்கும்?**
விடை:- நம எனும் பதம் பசுவையும்
சி எனும் பதம் பதியையும்
வய எனும் பதம் பாசத்தையும் குறிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**33. வினா:-** **நமசிவாய எனும் பஞ்சாட்சரத்தினுள் சகல தத்துவங்களும் அடங்கியுள்ளன என்பதனை சிவவாக்கியர் எவ்வாறு பாடினார்?**

விடை:- சிவாய வென்னும் அக்ஷரம் சிவனிருக்கும் அக்ஷரம் உபாய மென்று நம்புவோர்க்கு உண்மையான அக்ஷரம் கபாடமிட்ட வாயுவைக் கடந்து போகும் வாயுவை உபாயமிட்டழைக்குமே சிவாய என் றெழுத்துமே//

**34. வினா:-** **பஞ்சாக்ஷ ரத்தின் சிறப்பை பல பாடல்களில் பாடியவர் யார்?**

விடை:- திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

**35. வினா:-** **சம்பந்தர் பாடிய பஞ்சாக்ஷ ர சிறப்பு அடங்கிய பாடல் வரிகள் எவை?**

விடை:-
1. வேதம் நான்கிலும் மெய்ப்பொருள் ஆவது
   நாதன் நாமம் நமச்சிவாயவே
2. சிந்தும் வல்வினை செல்வமும் மல்குபால்
   நந்தி நாமம் நமச்சிவாயவே
3. நம்பன் நாமம் நமசிவாயவே
4. நல்லார் நாமம் நமச்சிவாயவே

**36. வினா:-** **தமிழ் மூதாட்டி ஒளவை தமது நல்வழியில் நமச்சிவாய சிறப்பை எவ்வாறு கூறுகின்றார்?**

விடை:- "சிவாயநம" என்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒரு நாளும் இல்லை.

**37. வினா:-** **திருக்குறள் தந்த வள்ளுவர் ஐந்தெழுத்தாகிய பஞ்சாக்ஷரத்தின் சிறப்பை எவ்வாறு குறிப்பிட்டார்?**

விடை:- சிறப்பு வனப்பு யாப்பு நடப்பு மறைப்போடு உறக்காண்பர் "ஐந்தெழுத்தினுள்"

**38. வினா:-** **திருமந்திரம் பாடிய திருமூலர் ஐந்தெழுத்தின் பெருமையை எவ்வாறு குறிப்பிட்டுள்ளார்?**

விடை:-
ஐம்ப தெழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்து ஆகமங்களும்
ஐம்ப தெழுத்தேயு மாவது அறிந்தபின்
ஐம்ப தெழுத்துப் போய் அஞ்செழுத்தாமே!
(ஐந்து எழுத்தில் ஐம்பது எழுத்தும் அடங்கும் என்கிறார்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீதேவி இராஜராஜேஸ்வரி துணை

# மாதாந்த வெளியீடு

சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

(ஆன்மீக மலர்)



**சந்தா விபரம்**

| | |
|---|---|
| ஆயுட் காலம் | 1000.00 |
| ஆண்டுச் சந்தா | 300.00 |
| தனிப்பிரதி | 25.00 |
| வெளிநாடுகளுக்கான ஆயுட் சந்தா | U. S. $ 50 |

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

சர்வதேச இந்து மத குருபீடாதிபதி

**கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்**

(அகில இலங்கை சமாதான நீதிவான்)

**சர்வதேச இந்துமத குருபீடம்**

**INTERNATIONAL HINDU RELIGIOUS GURU PEEDAM**

(APPROVED BY THE GOVERNMENT OF SRI LANKA)

**சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்**

**46, 7வது லேன், கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.**

46, 7th Lane, (Bloemendhal Road) Kotahena, Colombo-13.
Cell: 0722 422239

*Printed by: Anush Printers Col-11. Tel: 0777 244893*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org